தமிழ் முரசு

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்

பொருளடக்கம்

புதிய அரசியல்	தலையங்கம்	... உ
செய்திகள்		... கசு
அந்த நாள் (தொடர் கதை)	மு. வரதராசனார்	... கஎ
சாவுக்கு அஞ்சலாமா?	ச. மு. பிள்ளை	... உரு
அன்னைக்கு	மு. வரதராசனார்	... உஅ
எல்லாத் தமிழர் மாநாடு	'ஞானம்'	... ஙசு
தமிழரசில் முஸ்லிம்கள்	கா. மு. ஷெரிப்	... சஉ

●

தொகுதி உ பகுதி ரு

விலை 4 அணா 1-3-48

புதிய அரசியல்

சுதந்திர இந்தியாவின் அரசியல் நகல் வெளியாகிவிட்டது. வீரத் தியாகிகள், சட்ட அறிஞர்கள், சர்வதேச செல்வாக்குள்ள அரசியல் தலைவர்கள், நிர்வாக நிபுணர்கள் அத்தனைபேரும் ஒருங்குகூடி, பல மாதங்களாக ஆலோசித்து, பல தேசத்து அரசியல் அமைப்புகளையும் ஆராய்ந்து தயாரித்த அரசியலின் நகல்தான் இது. எனவே, ஒவ்வொரு இந்தியனும் அதை மதிப்புடன் ஆராயக் கடமைப்பட்டுள்ளான். தமிழ் மக்களாகிய நாம், தமிழ் இனத்தின் வருங்கால வாழ்வுக்கு இந்தப் புதிய அரசியல் எப்படி வழிகாட்டும்? சுகவாழ்விற்கு அழைத்துச் செல்லுமா? அல்லது, சுரண்டல் பாதைக்குக் கூட்டிச் செல்லுமா? - என்ற பொறுப்புடனும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

செக்கிழுத்த சிதம்பரனார் சிந்திய ரத்தத்தால், அடிபட்டுச் செத்த குமரனின் உடலிலிருந்து ஆறெனப் பாய்ந்த செந்நீரால் எழுதப்பட்ட அரசியலே இது. அந்த வீரத் தியாகிகளின் விழுமிய சேவை இல்லை என்றால், ஆங்கில அரசு அகன்றிருக்குமா? இந்த அரசியல் நகல் தோன்றியிருக்குமா? இல்லை; இல்லை. ஆனால், அந்தத் தியாகிகளின் ரத்தத்தால் எழுதப்பட்ட இந்த அரசியல், அதே ரத்தக் கலப்புடைய தமிழ் இனத்தின் உரிமையை அபகரிக்காது அங்கீகரித்திருக்கிறதா? என்ற கண்ணோட்டத்துடன் எழுத்து எழுத்தாக, வரி வரியாக நாம் ஆராய்ந்து பார்த்தோம். நமது புறக்கண்கள் அரசியலின் நக

லைக் காண, அகக்கண்கள் அன்று அடைபட்ட இருட் சிறையின் சிறிய அறை, அந்த அறையில் அமர்ந்து எண்ணிய கம்பிகள், அந்தக் கம்பிகளைக் கடந்து தப்பாதவாறு எழுப்பியிருந்த உயர்ந்த மதில்கள், அந்த மதில்களுக்கு உள்ளும் புறமுமாக ஈட்டி பொருந்திய துப்பாக்கிகள் தாங்கி இங்குமங்குமாக நடமாடிய காவலர்கள், அந்தக் காவலுக்குள்ளே பட்ட மன வேதனை ஆகிய யாவும் ஒன்றன்பின் ஒன்றாக தோன்றித் தோன்றி மறைந்தன. இவ்வளவு துன்பங்களையும் மனம் கோணாது சகித்துக் கொள்வதற்கு அன்று எந்தத் தேசபக்தி காரணமாயிருந்ததோ, அதே தேச பக்தியுடன்தான் அறிக்கையை ஆராய்ந்தோம்.

'சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு உண்டா?' என்பதே நமது ஆராய்ச்சியின் அடிப்படை. ஆம்; நமது இன்பத் தமிழகம்—நாம் பிறந்து வளர்ந்த தொட்டில்—நாம் ஓடி ஆடிய பூங்கா—நம் முன்னோரின் அஸ்தி கலந்த அருமை நிலம்—இந்தத் தமிழ் நாடேயல்லவா? எனவே, அதன் சுதந்தர வாழ்வு, அது பிரிந்து வாழும் பிறப்புரிமை ஆகியவை ஒப்புக் கொள்ளப்பட்டதா என்று ஆராய்ந்தோம். ஆனால், தமிழ் இனத்துக்குத் தனியரசு இல்லை என்பது தெளிவாகி விட்டது.

புதிய அரசியல், பழைய ஏகாதிபத்தியத்துடன் இன்னும் நமக்குள்ள சொற்பத் தொடர்பும் என்றைக்கு அற்றுவிடும் என்று எடுத்துக் கூறவில்லை. இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விலகும் நாள் பின்னர் அறிவிக்கப்படுமாம்! இதையும் சட்

டம் கூறவில்லை. சட்டத்தைத் தயாரித்தவர்கள் கூறுகின்றனர்.

இந்த அரசியல் நகல்மீது வயதுவந்த வாக்காளர்களின் தீர்ப்பு கோரப்படுமா? இல்லை.

அல்லது, மாகாண சட்ட சபைகளுக்கேனும் அனுப்பி அவர்களுடைய திருத்தம் அல்லது தீர்ப்பு கோரப்படுமா? அதுவுமில்லை.

இந்த அரசியல் நகலே அரசியல் நிர்ணய மன்றத்தின் இறுதித் தீர்ப்பாம்! இதை எதிர்ப்பது ராஜாங்கத் துரோகமாம்! இவ்வாறெல்லாம்கூட ஒன்றிரண்டு தமிழ்ப் பத்திரிகைகள் எழுதத் தொடங்கி விட்டன.

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணமும் 'தனியரசு' போல கருதப்பட்டு, அந்தத் 'தனியரசு'களின் கூட்டுறவு கொண்ட அரசாங்கமே இந்திய யூனியன் என அரசியல் நகல் கூறுகிறது.

இதனால் மாகாணங்கள் தனியரசுரிமை பெற்றுவிட்டதாக சிலர் மகிழலாம். வகுப்பு வெறியிலே, சுரண்டல் புத்தியிலே சிக்கி மதியிழக்காத எவரும் இந்தத் 'தனியரசு' கோஷத்தை சர்வதேசக் கண்கொண்டு ஆராய்ந்தால் அதனுடைய சாயம் வெளுத்து விடும்.

இந்திய மாகாணங்களின் 'தனியரசு'கள் கலந்ததே இந்திய யூனியன் என்றால், மாகாண சட்ட

சபைகளுக்கு அரசியல் நகலை அனுப்பி அவற்றின் கருத்தை அறிய மறுப்பதன் காரணம் என்ன? அமெரிக்காவில் சமஷ்டி அமைத்தபோது அரசியல் நிர்ணய மன்றம், தான் தயாரித்த அரசியலை மாகாண அரசாங்கங்களின் ஆமோதிப்புக்கு அனுப்பியது. சில மாகாணங்கள் சமஷ்டியில் சேர மறுத்தன. அந்த மாகாணங்களை மத்திய சமஷ்டி மல்லுக்கிழுக்கவில்லை. அவற்றின் தனித்து வாழும் உரிமையை ஒப்புக் கொண்டது. ஆனால், மத்திய சமஷ்டியில் சேர்வதால் தமது மாகாண உரிமைகள் பறிபோகாதென்பதை காளடைவில் உணர்ந்த அந்த மாகாணங்கள் தாமா கவே வலிய வந்து சமஷ்டியில் கலந்தன.

ஆஸ்ட்ரேலியாவில் சமஷ்டி அமைத்தபோது அ. நி. மன்றம் தயாரித்த அரசியல் மசோதா, மாகா ணங்களிலுள்ள மக்களின் அபிப்பிராயத்துக்கு விடப் பட்டது. சில மாகாணங்கள் திருத்தங்கள் கோரின. பின்னர், சிறிது காலம் தவக்கப்பட்டாலும் கூடுமான வரையில் திருத்தங்களை ஏற்று, மாகாணங்களின் ஐயங்களை அகற்றிய பின்னரே அங்கு சமஷ்டி அரசாங் கம் அமைக்கப்பட்டது.

இந்திய அரசியல் நகலின் பல்வேறிடங்களில் அமெரிக்கா போன்ற நாடுகளின் அரசியல்கள் உவ மானம் காட்டப்படுகின்றன. அவற்றிலிருந்தெல் லாம் ஆதிக்கவாதிகளுக்குச் சாதகமாக உவமானங் களைத் தேடித்தந்த 'அல்லாடிகள்' கூட்டம், மேற் சொன்ன உண்மைகளை அதில் காணவில்லை போலும்!

மாகாணப் பிரிவினைபற்றி அரசியல் திட்டம் விஷயத்தைக் குழப்புகிறதே யொழிய, 'இந்தியா முழுவதுக்கும் மொழிவழி மாகாணப்பிரிவினை உடனடியாக அமுல் நடத்தப்படும்' என்று தெளிவாக, திட்டமாகக் கூறவில்லை // அறிக்கையில், ஆந்திரப் பிரிவினையைப் பற்றியே பிரஸ்தாபித்திருப்பதால், சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் அதற்குமேல் செல்லப்போவதில்லை என்பது நிச்சயமாகிறது. அறிக்கையில் தெளிவாக இல்லாத விஷயத்தை நமது அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தெளிவாக்கியிருக்கிறார். அவர் அண்மையிலே சென்னை எல்லைப் பாதுகாப்புத் தொண்டர் கூட்டமொன்றில் பேசுகையில், "ஆந்திரநாடு உடனே பிரியும். ஆனால் அப்புறமும் தமிழ், கேரள, கன்னட, மாகாணங்களின் சேர்க்கை என்ற பெயரில் 'சென்னை மாகாணம்' அப்படியே இருக்கும். இதைக் கொஞ்ச நாளைக்குப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்" என்று கூறியிருக்கிறார். அரசியல் நகலில் ஏற்படும் ஐயம்அமைச்சர் பேச்சில் உறுதியாகிறது. ஆந்திரநாடு அமைந்த பிறகும் தமிழ்நாடு தனிநாடாகாது; தமிழரசு நடவாது. சென்னை மாகாணம் என்ற பெயரில் தமிழகம் ஒளிந்திருக்கும். அங்கு மூன்று மொழி வழங்குமாதலால் தமிழைப் பின்தள்ளி, ஆங்கிலமே அரசு செலுத்தும். புதிய அரசியலில் தமிழர் நிலை இதுதான்.

இது நிற்க, தமிழ் நாட்டின் மீதுள்ள வடநாட்டு ஆதிக்கம் புதிய அரசியலுக்குப் பிறகேனும் குறைந்து

விடும் என்று நம்புவதற்கில்லை. மாகாண கவர்னரை அந்தந்த மாகாண மக்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற ஜனநாயக யோசனைக்கு மாற்று யோசனை கூறப்பட்டுள்ளது. மாகாண சட்டசபைகள் நான்கு பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாம். அந்த நான்கு பேரிலே ஒருவரை இந்தியக் குடியரசுத்தலைவர் கவர்னராக்குவாராம். மாகாண மந்திரிகள் மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால் மாகாண கவர்னரையும் நேரடியான தேர்தலில் தேர்ந்தெடுத்தால் பல அரசியல் சிக்கல்கள் எழுமென்று புதிய அரசியல் புலம்புகிறது. அந்தக்கவலை அதற்கிருக்குமானால், மாகாண சட்டசபையிலேயே ஒரே அபேட்சகரை இறுதியாகத் தேர்ந்தடுப்பதெற்கென்ன? அதை விட்டு குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் தருவானேன்? மாகாண சட்டசபை நான்கு பேரைத் தேர்ந்தெடுத்தால் அந்த நான்கு பேரில் கடைசி ஆளாக, சட்டசபையின் எண்ணிக்கையில் சரிபாதி யல்லாத அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவரையும் குடியரசுத் தலைவர் கவர்னராக்கி விடலாம். இது வடநாட்டு ஆதிக்க வாதிகளுக்கு ஆள்பிடித்துத்தரும் வித்தையோ என்று ஐயப்பட இடமிருக்கிறது. நமது ஐயத்துக்கு ஆதாரம் இல்லாமலில்லை.

சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலில், அக்கட்சிக்கும் மேலிடத் தாருக்கும் கருத்து வேறுபாடு தோன்றியதை நாடறியும். மேலிடத்தார் சிபாரிசு செய்தவரைத் தலைவராக ஏற்க சட்டசபைக் கட்சி மறுத்துவிட்டது.

அ

அப்போது "நான்கு பேரைத் தேர்ந்தெடுத்தனுப்புங்கள். அவர்களில் ஒருவரை நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம்" என்று மேலிடத்தார் கூறினர்.

காரண மென்ன? தாங்கள் முதலில் சிபாரிசு செய்த ஒருவர்—சட்டசபைக் கட்சியின் பெருவாரியானவர்களால் விரும்பப்படாத ஒருவர்—குறைந்த ஓட்டுகள் பெற்றேனும் நால்வருள் ஒருவராக வந்து விடுவார் என்று நம்பியதேயாகும். அதனால்தான் சட்டசபைக் கட்சி அந்த யோசனையையும் நிராகரித்து, திரு. பிரகாசம் ஒருவரையே தெரிந்தெடுத்தது. அன்று ஆலோசனையாகக் கூறிய அந்த சூழ்ச்சித் திட்டம் இன்று அரசியல் அமைப்பிலேயே புகுந்து விட்டது. பழைய அனுபவம் போலும்! ஆனால் அன்று எதிர்த்தவர்கள் இன்று அதை ஏற்றுக் கொண்டுள்ளது தான் விந்தை! தன்னல அரசியல் வாதிகளிடம் வேறென்ன எதிர்பார்க்க முடியும்.

'மாகாண கவர்னர்கள், அவர்கள் கவர்னர் பதவி வகிக்கும் அதே மாகாணத்தின் ஓட்டராக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை' என்று புதிய அரசியல் கூறுகிறது. இது ஒரு மாகாணத்தில் இன்னொரு மாகாணத்தவரை கவர்னராகப் புகுத்த இடந் தருவதாகும். அப்படிப் புகுத்தினால், மாகாணத்திலுள்ள வயதுவந்த வாக்காளர்கள் மனமொப்ப மாட்டார்கள் என்று அஞ்சித்தான் மாகாணக் கவர்னர் நியமனத்தை வயதுவந்த வாக்காளர்களிடமிருந்து

பறித்து மாகாணச் சட்ட சபைக்கும் அதற்கும் மேலாக குடியரசுத் தலைவருக்கும் மாற்றியிருக்க வேண்டும்.

ஒரு கவர்னர் தேர்தல் விஷயத்தில் இவ்வளவு பந்தோபஸ்து செய்யக் காரணம் என்ன? அதுவும் மக்களின் வாக்குரிமையைப் பறித்து, மாகாண சட்ட சபையின் பெரும்பான்மை தீர்ப்பையும் மிதித்து, மாகாண வாசி அல்லாத ஒருவரை கவர்னராக்கும் வகையில் அரசியல் நிர்ணய மன்றத்தின் கருத்து சென்றது ஆச்சரியமாகவே இருக்கிறது. வடநாட்டு அரசியல் ஆதிக்கத்தைத் தமிழ் நாட்டின்மீது அதிகப்படுத்துவதற்கோ என்றுகூட ஐயம் ஏற்படுகிறது.

மற்றும் அரசியல் நகலில், மாகாணங்களுக்கு இன்னின்ன அதிகாரங்கள் என்றும், யூனியன் அரசுக்கு இன்னின்ன அதிகாரங்கள் என்றும், இவை இரண்டும் சேர்ந்து நிர்வகிக்கும் அதிகாரங்கள் இன்னின்னவை என்றும் அரசியல் நிர்வாகப் பொறுப்புகளைப் பற்றிய பகுதியில் கூறப்படுகிறது. தமிழராகிய நாம் விரும்பியது மத்திய அரசுக்கு மாகாணங்களே விரும்பித் தந்த அதிகாரங்கள் போக இதர எல்லா அதிகாரங்களுடனும் கூடிய தனியரசு தமிழகத்தில் நடைபெற வேண்டும் என்பதாகும். ஆனால், மாகாண அரசுகளைத் 'தனியரசு' போல் கொள்வதாகக் கூறும் புதிய அரசியலில் புகுத்தப்பட்டுள்ள மேற் சொன்ன அதிகாரப் பங்கீடு முறை மாகாண அரசாங்கங்களைப் பெயரளவில் தனியரசாக

வும், செயலளவில் மத்திய அரசாங்கம் ஆட்டி வைக்கிறபடி ஆடும் அடிமை அரசாங்கங்களாகவும் செய்து விடுமென்பதில் ஐயமில்லை. மாகாணங்களுக்குக் கொடுத்து விட்ட விஷயங்களைக்கூட மத்திய அரசாங்கம் வேண்டும் போது எடுத்துக் கொள்ள புதிய அரசியலில் இடமிருக்கிறது. மத்திய யூனியனின் மேல் சபைக் கூட்டத்தில் ஆஜராகி யுள்ள அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஓட்டளித்தால்தான் மாகாணங்களின் அதிகாரம் எதையும் மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம் என்று புதிய அரசியல் கூறுகிறது. //

இந்த தான் என்ற இரண்டெழுத்தைக் கொண்டு மத்திய அரசாங்கம் மாகாணங்களின் அதிகாரங்களை எளிதில் பறிக்காதவாறு பாதுகாப்பளிப்பதாகப் பாசாங்கு செய்கிறது புதிய அரசியல். ஆனால், அந்த யூனியன் மேல் சபை எத்தகையது? கொழுத்த முதலாளிகளும் அவர்களுக்குப் பக்க மேளம் கொட்டும் பதவி வேட்டையாளரும் அடங்கிய 'பிரபுக்கள் சபை'யே யல்லவா? சுரண்டல் கொள்கைக்குச் சாதகமாக "இந்தியர் ஒரே இனம்" என்று கோஷமிடும் இந்தக் கூட்டத்தார், மாகாணங்களின் உரிமைக்கு மதிப்புத் தருவார்களா? குறிப்பாக, வடநாட்டு முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு உள்ளாகியுள்ள தென்னிந்திய மாகாணங்களின் தீனக்குரல் அவர்கள் திருவுள்ளங்களில் புகுமா? ஒரு போதும் இல்லை. மாகாணங்களின் உரிமையை எடுத்துக் கொள்ளும் விஷயத்தில் மத்திய யூனியனின் கீழ்ச் சபைக்கேனும் உரிமை அளிக்காததன் காரண மென்ன?

மாகாணங்களிடமிருந்து மத்திய யூனியன் எடுத்துக் கொண்ட பொறுப்புகளில் அவசியம் நேர்ந்தால் எதையேனும் மாகாணங்கள் திருப்பிக் கேட்பதற்குப் புதிய அரசியலில் இடமே இல்லை. சுருங்கச் சொன்னால் புதிய அரசியலின்படி மாகாணங்களின் நிலைமை இதுதான்:

மத்திய யூனியன் தனக்கே உள்ள பொறுப்பில் ஏகபோக ஆதிக்கம் செலுத்தும்.

தானும் மாகாணமும் சேர்ந்து நிர்வகிக்கும் பொறுப்பிலும் சாம, பேத, தான முறைகளைக் கையாண்டு காரியத்தைச் சாதிக்கும்.

மாகாணங்களுக்கென்று விடப்பட்டுள்ள அதிகாரங்களையும் மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்வதற்கும், அவற்றில் தலையிட்டுத் தாக்கீது பிறப்பிப்பதற்கும் இந்தச் சட்டத்தில் மூன்று சாதனங்கள் இருக்கின்றன.

(1) யூனியன் மேல்சபை அங்கத்தினரின் மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகள். (2) அபாய நிலைமை என்று காரணங் காட்டி மாகாண நிர்வாகத்தை (மந்திரி சபையையும் சட்ட சபையையும் புறக்கணித்து,) கவர்னரே எடுத்துக் கொள்ளுதல். (3) அவர் மூலம் இந்தியக் குடியரசுத் தலைவர் மாகாணம் முழுவதும் இந்திய யூனியனின் நேரடியான நிர்வாகத்தின் கீழ் வந்து விட்டதாகக் கூறுதல் இம் மூன்றும். இறுதியாகக் கையாளக் கூடிய தண்ட முறைகளாகும்.

இவ்வாறு, சாம, பேத, தான தண்டம் என்று வடமொழி காட்டிய நான்கு வழிகளையும் கொண்டு மாகாணத்தின் மீது ஆதிக்கம் செலுத்த இடமிருக்கிற போது மாகாணங்கள் "தனியரசு போன்றது" என்று கூறுவது ராஜீயச் சூழ்ச்சி

உண்மையைக் கூறினால், காங்கிரஸ் மேலிடத்தார் அன்னிய அரசை அகற்றி, அந்த பீடத்தில் தாங்கள் இருந்து கொண்டு அதைவிட ஒரு நல்ல அரசை நமக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆனால், நமது வரலாற்று வழி நமக்குச் சொந்த அரசு அமைத்துத் தரவில்லை. நாமே அமைத்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமையும் வழங்கவில்லை. என்றாலும், நாம் சோர்ந்து விடக் காரணமில்லை. மக்களின் சக்தியில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். எந்த அரசியலையும் சட்ட ரீதியாகவும், சமாதானமான முறையிலும் மாற்றுவதற்கு மக்கள் சக்திக்கு உரிமையுண்டு. திறமையும் உண்டு. எனவே, தமிழ் மக்களாகிய நாம் முன்னூறு ஆண்டு அடிமைத்தனத்திற்குப் பிறகு இன்று நமக்குக் கிடைத்துள்ள புதிய அரசியலை இனி நமக்குக் கிடைக்கவேண்டிய ~~சுதந்திர~~ சோஷலிசத் தமிழ்க் குடியரசை அடைவதற்கான அடிப்படையாகக் கொண்டு தமிழினத்தின் பிறப்புரிமையான ~~சுதந்திர~~ சோஷலிசத் தமிழரசை அடைய ஒன்றுபட்டுப் போராடுவோம்!

திருவிதாங்கூர் தமிழர் வெற்றி!

திருவிதாங்கூர் அரசியல் நிர்ணய மன்றத்திற்கு நடை பெற்ற தேர்தலில், தென் திருவிதாங்கூரில் தமிழ்நாடு காங்கிரசுக்கும் சமஸ்தான காங்கிரசுக்கும் பலமான போட்டி யிருந்தது. என்றாலும் தமிழ்நாடு காங்கிரஸ், தான் போட்டியிட்ட தமிழ் தாலுக்காக்களில் நெய்யாற்றங் கரைத் தாலுக்காவைத் தவிர இதர எல்லா தாலுக்காக்களி லும் வெற்றி பெற்று விட்டது. எதிர்த்து நின்ற மலையாள அமைப்பாகிய சமஸ்தான காங்கிரஸ் அபேட்சகர்களின் (இவர் களும் தமிழர்களே!) இரண்டொருவர் தவிர எல்லோரும் கட்டிய பணத்தை இழந்து விட்டனர். இந்தத் தேர்தலில், "திருவிதாங்கூர் தமிழகத்தைத் தமிழ் நாட்டோடு சேர்த்து புதிய தமிழகத்தை உருவாக்க வேண்டும்; இடைக் காலத்தில் திருவிதாங்கூர் தமிழகம் சமஸ்தான மன்னரின் கீழ் தனி மாகாணமாக அமையவேண்டும்" என்ற கோரிக்கை களின் பேரில்தான் தி. தமிழ் நாடு காங்கிரஸ் போட்டி யிட் டது. பட்டம் தாணுப் பிள்ளை போன்ற சமஸ்தான காங்கி ரஸ் தலைவர்கள் திருவிதாங்கூர் தமிழகம் தமிழ் நாட்டோடு சேர்வதா, ஐக்கிய கேரளத்தோடு சேர்வதா என்பதைப்பற்றி அதில் வாழும் தமிழர்களே முடிவு செய்யும் சுயநிர்ணய உரிமையை ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே, இந்தத் தேர்தலின் முடிவிலிருந்து திருவிதாங்கூர் தமிழகம் தமிழ் நாட்டோடு சேர விரும்புவது தெளிவாகத் தெரிந்துவிட்டது. இனி, கணமும் தாமதியாது சமஸ்தானத்தின் தமிழ்ப் பகுதியை தமிழ் நாட்டோடு சேர்த்து விடும்படி சமஸ்தான அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதுதான் அறிவுடைமை யாகும். அதை விட்டு இனியும் தமிழரின் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்குவதில் சமஸ்தான அரசாங்கத்திற்கு ஆதரவு காட்டுவது நீதியல்ல.

வெற்றிபெற்ற தி. தமிழ் நாடு காங்கிரஸ் அபேட்சர் களுக்கு நமது மனமார்ந்த வாழ்த்து. அந்த வெற்றிக்குத் துணை புரிந்த வாக்காளர்களுக்கும் போலீசாரின் கொடிய

அடக்கு முறைகளுக்கும், போக்கிரிகளின் கத்திக்குத்துகளுக்கும் அஞ்சாது தேர்தலில் வெற்றிக்குப் பாடுபட்ட வீர இளைஞர்களுக்கும் தமிழகத்தின்சார்பாக நமது தாழ்மையான வணக்கம். தோல்வியுற்ற அபேட்சகர்கள்கூடத் தங்கள் தோல்வி தமிழினத்தின் வெற்றியாய் முடிந்ததற்காக மகிழ்ச்சி அடைய வேண்டும். இது கட்சிப் பிரச்சினையல்ல. இனப் பிரச்சினை. எனவே, தமிழராகப் பிறந்து தமிழ் நிலத்தில் வாழும் அவர்கள் தமிழினத்துக்குக் கேடு சூழும் மலையாளிகளோடு ஒத்துழைக்க மறுக்க வேண்டும்.

வாழ்க இலங்கை

இலங்கைத் தீவு கிளர்ச்சி யின்றி, புரட்சி யின்றி சுதந்திரம் பெற்று விட்டது. தமிழகமும் இலங்கையும் ஏறக்குறைய ஒரே காலத்தில், ஒரே ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெற்றன. என்றாலும் சுதந்திரம் பெற்ற மறுகணத்திலேயே சிங்களவர் தமது சொந்த வரலாற்றின் வழியே, சொந்தக் கொடியின் கீழே சுயாட்சி நடத்துகின்றனர். சிங்களத்தில் வாளேந்திய சிங்கக் கொடி சுதந்திரக் காற்றால் ஆடிப் பறக்கும் போது அதிலிருந்து கிளம்பும் ஒலி தமிழகத்தைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும் ஒலியாக காதுக்குக் கேட்கிறது. ஆம்! தமிழகத்தின் அண்டைநாடு, ஒரு காலத்தில் தமிழன் ஆண்ட நாடு; தமிழகத்தில் ஒரு ஜில்லா அளவுக்குக்கூட இல்லாத ஒரு சிறு தீவு, சுய ஆட்சி நடத்தும் போது இமயத்தில் கொடி பொறித்து ஏற்றங் கொண்ட சாதி, அரசாளும் நெறி தெரிந்த அறிவு மிக்க நாடு, தனியரசின்றி, தனியரசு கேட்கும் தைரியமுமின்றி, அடங்கிக் கிடக்கிற தென்றால் வெறும் சின்னமாகிய சிங்களக் கொடிகூட சிரிக்கத்தான் செய்யும்.

இலங்கையும் தமிழகமும் ஒரு காலத்தில் நிலத்தொடர்பு கொண்டிருந்ததாக ஆராய்ச்சியாளர் அறிவிக்கின்றனர்.

இன்றும்கூட இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையே ஓடும் கடல் ஆழமுடையதோ, அகலமுடையதோ அல்ல. "சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" என்று பாரதியார் கூறியது போல், பாலம் அமைத்து உறவாடும் நிலமையில்தான் இந்த இருநாடுகளும் இருக்கின்றன.

மொழி, கலை, வரலாறு வாழும் மக்களின் மனப்பான்மை ஆகிய எல்லாவற்றாலும் சிங்கள நாடு இதர இந்திய மாகாணங்களைவிட தமிழகத்தோடுதான் அதிக தொடர்பு கொண்டிருக்கிறது. ஏன்? இலங்கையர் வணங்கிய பத்தினித் தெய்வம் நம் கண்ணகியே ஒழிய பாஞ்சாலி அல்ல.

தமிழகம் தனியரசு பெறுமாகில் இலங்கை அந்தத் தமிழரரோடு சமஷ்டியாக இருப்பதற்குக் குறுக்கே நிற்பது ஒன்றுமில்லை. அந்த நிலை ஏற்படுவதை தடுக்காதவாறு அங்குள்ள தமிழருக்கும் சிங்களவருக்கும் நட்பு வளர வேண்டும். அதற்குள்ள ஒரே வழி இலங்கை அரசில் இந்த இரு இனத்தவரும் சமஉரிமை பெறுவதேயாம். வாழ்க இலங்கை!

புரட்சி

புரட்சி யென்றாலென்ன? இயற்கையில் ஒவ்வொரு பொருளும் விடுதலை தேடுகிறது; அடக்கு முறையைச் சாடுகிறது. கண்டபடி சுமை ஏற்றினால் வண்டி மாடு சண்டித்தனம் பண்ணுகிறது. சுமை தாங்க முடியாவிட்டால் பொதிக் கழுதைகூடப் புரட்சி பண்ணுகிறது. வகையில்லாது போட்டுத் திணித்தால், வயிறுகூட வம்பு பண்ணுகிறது. தன்னை அடைத்து வைக்கும் கரைகளில் கர்ச்சித்து மோதிக் கடல் புரட்சி செய்கிறது. ஒருவர் ஆணவத் திமிர் மற்றொருவரை ஏறி மிதிக்கும்போது, மனிதான்மாவின் சமஉரிமை யுணர்ச்சி கிளர்ந்தெழுவதே புரட்சி. உலகில் ஆண்டை அடிமை, மேற்சாதி கீழ்ச்சாதி, எசமான், சேவகன் அரசன் குடி என்றிருக்குமட்டும் புரட்சியும் பொருபொருப்பும் இருக்கத்தான் செய்யும். கட்டுள்ள மட்டும் கலகந்தான். ஏனெனில், சுதந்திரம் மனிதான்மாவில் இயல்பு.

—விக்தர் ஹியூகோ

செய்திகள்

சென்னை :— மாநிலத் தமிழரசுக் கழக ஆதரவில் பிப். 11-ந் தேதி மாலை ராயப்பேட்டை அம்மன் கோயில் முன்பு பெரியதோர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தலைமை வகிக்க, திருவாளர்கள் அ. ச. ஞானசம்பந்தம், ம. பொ. சி. ஆகியோர்கள் அடிகளின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

கோனுபட்டு :— காந்தியடிகளின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு கோனுபட்டு தமிழரசுக் கழகத்தார் பிப். 12உ மாலை ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்தினர். அறிஞர்கள் பலர் அடிகளின் சேவையைப் புகழ்ந்து பேசினர்.

கும்பகோணம் :— ஸ்ரீ தேவி நாடக சபையினர் தமது தேவித் தியேட்டரில் ஜனவரி 13உ பகல் காந்தி அடிகளின் பெயரால் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏழைகளுக்கு அன்னதானம் செய்வித்தனர். ஸ்ரீ தேவி நாடக சபையின் அதிபர்: திரு. கே. என். ரத்தினம் அவர்களின அன்னதான அளிப்பு பாராட்டிற்குரியது.

அரிமழம் :— இவ்வூர் இலக்கிய வளர்ச்சிக் கழகச் சார்பில் பிப்ரவரி 2—ம் நாள் ஞாயிறன்று மாலை சிவன் கோயிலில் விழா நடந்தேறியது. காந்தியடிகளுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்ட பின் பால கவி. வே. இராமனுசன், ஆ. முதலுசிவம் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர். இராமச்சந்திரபுரம் திரு. S மீசாபசுந்தரம் குழுவினரின் இசைக கச்சேரியும் விழா இனிது முடிந்தது.

கோடந்தூர் :— இவ்வூர் தமிழரசுக் கழகத்தார் ஜன. 14உ மாலை திரு. முத்துச்சாமி தலைமையில் தமிழர் திருநாள் கொண்டாடினர். மாணவர்கள் தமிழரசுப் பாடல்கள் பாடினர். சோ. ச. இராமசாமியும், ஆசிரியர் தெய்வ சிகாமணியும் தமிழரசுக் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். "சோஷியலிசத் தமிழ்க் குடியரசு அடைந்தே தீருவோம்" என்ற கோஷத்துடன் விழா முடிவுற்றது.

[கடந்த இதழில்: ரங்கூன் நகரம் ஜப்பான் படையெடுப்புக் குள்ளாகிறது. அங்கே ஒரு கம்பெனியில் வேலை பார்த்து வரும் ஆறுமுகம் தன் மனைவியான பொன்முடியையும், பதினெட்டு வயதுள்ள மகள் வாணியையும் தாய்நாடான தமிழ் நாட்டுக்கு அனுப்ப முயல்கிறார். அவர் எவ்வளவு வற்புறுத்தியும் பொன்முடி அவரைத் தனியே விட்டுச் செல்ல பிடிவாதமாக மறுக்கிறாள். இதற்கிடையே ஜப்பானிய ஆகாய விமானங்கள் குண்டுமாரி பொழிகின்றன. மக்கள் நகரை விட்டு அணியணியாக வெளியேறுகின்றனர். இந்த நிலையில் ஆறுமுகம் உள்ளம் குழம்பி வருந்துகிறார். அவர் பள்ளித் தோழனான நீலமேகனும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு விட்டான்.]

2. பொன்முடி

என்னைப் பொறுத்த வரையில் அவர் எப்போதும் இவ்வளவு பிடிவாதம் செய்ததே இல்லை. இப்போது நான் சொல்லும் சொல்லைக் கேட்கவும் அவர்க்கு மனம் இல்லை. தம் சொல்லுக்கு மாறு சொல்லாமல் கீழ்ப்படிதலே

வேண்டும் என்கிறார். சில வேளைகளில் அப்படி நடந்தாக வேண்டும் என்று பொதுவான அறிவுரையும் கூறி வற்புறுத்துகிறார்.

அரசாங்கமும் மக்களை இப்படித்தான் நடத்துகிறது; இப்படித்தான் சொல்லுகிறது. சில வேளைகளில் மாறான செயலையும் மாறான சொல்லையும் அரசாங்கம் அடியோடு வெறுக்கின்றது. எல்லாருக்கும் வாக்குரிமையும் பேச்சுரிமையும் கொடுத்து ஊக்கப்படுத்தும் அரசாங்கம் அதைச் சில வேளைகளில் வாயைத் திறந்து உண்மையைப் பேசுகின்றவர்களை எல்லாம் சிறைப்படுத்துகின்றது; தண்டிக்கின்றது; வதைக்கின்றது; கொல்கின்றது.

'சில வேளைகளில்' என்று ஏன் சொல்ல வேண்டும்? போர்க் காலத்தில் என்று ஒரு காலத்தைக் குறிப்பிட்டால் போதுமே! ஜனநாயக அரசாங்கமெல்லாம் போர் வந்த மறுநாளிலேயே கொடுங்கோல் அரசாங்கமாக அல்லது தனி மனிதன் ஆட்சி முறையாக மாறி விடுகின்றன. ஒருவன் சர்வாதிகாரியாகத் தோன்றி விருப்பம் போல் மக்களை ஆட்டி வைக்கிறான்.

போர்க் காலத்தில் அரசாங்கத்தின் குறையை ஒருவரும் வாய் திறந்து பேசக்கூடாது. அரசாங்கத்திற்கு ஒருவரும் ஒன்றும் அறிவுரை சொல்லக்கூடாது. அரசாங்கம் சொல்வதெல்லாம் உண்மை என்று நம்ப வேண்டும். எதிரிகள் சொல்வதெல்லாம் பொய் யென்று தள்ள வேண்டும். அரசாங்கம் செய்வதெல்லாம் நன்மை என்று கொள்ள வேண்டும். எதிரிகள் செயல் எல்லாம் அட்டூழியம் என்று வெறுக்க வேண்டும். அரசாங்கம் விதிக்கும் வரி எல்லாம் முறை என்று கட்ட வேண்டும். எதிரிகளைப் புகழ்ந்து பேசிய தாக ஒருவனைப்பற்றிக் கனவு கண்டாலும் அவனை முன்னே தொலைத்து விடவேண்டும். அரசாங்கம் 'ஊரை விட்டுப் போ' என்றால் போய்விடவேண்டும்; 'வா' என்றால் வந்து விடவேண்

டும். போர் வேளையில் நன்மை தீமை ஆராய்ச்சிக்கு இடந் தருவதே இல்லை. கண்ணை மூடி நம்ப வேண்டும். சொன்னதெல்லாம் செய்ய வேண்டும்.

போர்க் காலத்தில் நாட்டில் புகுந்த ஆட்சி முறையை வீட்டிலும் புகுத்த வேண்டும் என்பது அவர் எண்ணமோ? இத்தனை நாளாக வீட்டில் நான் அரசியாக வாழ்ந்தேன். அவர் அரசராக வாழ்ந்தார். அவர் ஆளும் முறை வந்த போது நான் அமைச்சுத் தொழில் மேற்கொண்டு ஆலோசனை கூறி வந்தேன். நான் அரசியாக இருந்து கடமைகளைச் செய்யும் போது அவர் அமைச்சராக இருந்து துணை செய்து வந்தார். நாட்டுப் போர் வீட்டிலும் புகுந்தவுடன், அவர் சர்வாதிகாரியாக மாறி விட்டார். அமைச்சர் என்னும் மந்திரி சபையைக் கலைத்து விட்டார். அவர் சொல்ல வேண்டுமாம். நான் சிறிதும் எண்ணிப் பார்க்கக்கூடாதாம்! உடனே அதன்படி செய்துவிட வேண்டுமாம். இது ஒரு காலம்!

என் தம்பி படுக்கையாகப் படுத்து எமனோடு போராடிக் கொண்டிருந்த போது அன்னையின் கன்னம் கன்னிப் போன கதை நினைவுக்கு வருகின்றது. வைத்தியர் வந்து பார்த்து நிமோனியா காய்ச்சல் என்று நாமகரணம் செய்து விட்டுப் போனார். போகும் போது "மிகவும் உன்னிப்பாக இருந்து பார்த்துக் கொள்ள வேண்டும். என்னால் ஆனது செய்கிறேன். ஆனாலும், இரண்டு நாளைக்கு முன் என்னிடம் ஒப்படைத்திருந்தாலும் எப்படியாவது காப்பாற்றியிருப்பேன் இப்போது இருக்கும் நிலைமை பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்" என்று சொல்லி விட்டுப் போனார். சன்னலின் மேல் கதவுகள் இரண்டையும் திறந்து வைக்கும்படி சொன்னார். கேட்டுக் கொண்டிருந்த தாயும் தந்தையும் ஓவியம் போல் அப்படியே நின்று விட்டார்கள். சிறிது நேரத்திற்குள் அன்னை தம்பியின் படுக்கை யருகே உட்கார்ந்து வருந்திக் கொண்டிருந்தாள். நான் சும்மா இராமல், டாக்டர் சன்ன

லைப் பற்றிச் சொன்னதை நினைவூட்டினேன். உடனே அன்னை, சன்னலின் கீழ்க்கதவுகள் இரண்டையும் திறந்தாள். அதைப் பார்த்த அருமைத் தந்தை நேரே வந்து அன்னையின் கன்னத்தில் ஓங்கி ஓர் அடி கொடுத்துவிட்டு, "குழந்தை இருக்கும் ஆபத்து என்ன? குடித்தனம் பண்ணுகிற அழகு என்ன? மேல் கதவைத் திறக்கச் சொன்னால், கீழ்க்கதவை திறப்பதா? இந்தக் கழுதைதான் கண்டபடி மருந்து கொடுத்து மகனைக் கொன்று விடுவாள்" என்று கொதித்து அடங்கினார். உடனே மேல் கதவு திறக்கப்பட்டது. கீழ்க் கதவு மூடப்பட்டது. தம்பியும் தப்பினான். அன்று எமனோடு போராடியவன் இன்று பட்டாளத்தில் சேர்ந்து எதிரியோடு போராடுகின்றான். எல்லாம் முடிந்தது. ஆனால் அந்த வலுவான அடியைக் கன்னத்தில் வாங்கிக் கொண்டு துடைக்கவும் துடைக்காமல் அமைதியாக இருந்து மகன் உயிரைக் காப்பாற்றினாள் அன்னை.

சொன்னபடி செய்ய வேண்டும். இது ஆணை. உயிருக்கு ஆபத்து நேர்ந்த போதெல்லாம் இந்த ஆணை பிறக்கிறது. அரசாங்கத்திலும் இந்த ஆணை; குடும்பத்திலும் இந்த ஆணை. உயிருக்கு ஆபத்து என்றால் அரசாங்கத்திலும் வெறி, குடும்பத்திலும் வெறி. அறிவுக்கோ, பொறுமைக்கோ, ஆலோசனைக்கோ யாரும் இடங் கொடுப்பதில்லை. உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற வெறியில் மனிதனுடைய அறிவும் நிற்பதில்லை; பண்பும் நிற்பதில்லை.

ஆனால், என் கணவரைப்பற்றி அப்படிச் சொல்வதில் பயனில்லை. அவர் நேற்று இரவுதான் அந்த வெறி கொண்டார். அதுவும் திடீரென்று கொள்ளவில்லை. பதினைந்து நாளாக இரவும் பகலும் எனக்குச் சொல்லிச்சொல்லிச் சலித்துப் போனார். அறிவின் திறமையெல்லாம் காட்டிச் சொல்லிப் பார்த்து விட்டார். புதுப்புது வகையாகச் சொன்னார். நானும் புதுப்புது காரணங்கள் சொல்லி மறுத்து விட்டேன். ஒரு நாளைப் போல் பல நாளும் நான் மறுத்து

வந்தால் யார்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? நேற்று அவர் மனமும் துணிந்து விட்டது. "இனி மேல் பதில் பேசக்கூடாது; சொன்னபடி செய்தாக வேண்டும். நாளைக்கு யாருடனாவது அனுப்பி விடுவேன். புறப்பட்டுப் போயாக வேண்டும். பதில் பேசுவதாக இருந்தால், இனி மேல் உன் முகத்தில் விழிக்கமாட்டேன்" என்றார்.

"இரண்டும் ஒன்றுதானே" என்றேன்.

"என்ன சொன்னாய்?" என்று வெறுப்போடு கேட்டார்.

"நான் புறப்பட்டுப் போகாவிட்டால் முகத்தில் விழிக்கப் போவதில்லை. புறப்பட்டு யாரோடாவது போய்விட்டாலும் அவ்வளவுதான். அப்புறம் யார், யார் முகத்தில் விழிக்க முடியும்? அதைவிட இந்த மண்ணிலேயே முகத்தில் விழிக்காமல் சாகலாமே" என்றேன்.

"தெய்வமே!" என்று ஒரு பெருமூச்சு விட்டார். உடைந்து போகும் இதயத்தை இறுகப் பிடிப்பவர் போல் தம்முடைய மார்பின் மேல் கை வைத்துத் தலை கவிழ்ந்து படுத்துக் கொண்டு வருந்தினார். நான் திரும்பிப் படுத்துக் கொண்டு அழுதேன். என் விம்மல் அவருக்குத் தெரிந்ததும், தலை நிமிர்ந்து என் முகத்தைப் பார்த்து, "இப்படி இரண்டு வாரமாய் அழுதது போதும்! இனிமேல் வீட்டை விட்டுப் புறப்பட்டே தீரவேண்டும். பதில் கிதில் பேசக் கூடாது. போதும் உன்னால் நான் பட்டது" என்றார்.

நெடுநேரம் இருவரும் தூங்க வில்லை. தனித் தனியே எங்கள் நெஞ்சங்கள் கலங்கிக் கொண்டிருந்தன. கண்கள் அழுது கொண்டிருந்தன. அந்தக் கடைசிச் சொல் என் நெஞ்சுப் புண்ணைக் கிளறிவிட்டது. "உன்னால் நான் பட்டது—!"

மணி பன்னிரண்டடித்தது; ஒன்று அடித்தது. அரை மணி கழித்து மறுபடியும் ஒன்று அடித்தது. அரை மணி

கழித்து இன்னொரு முறை ஒன்று அடித்தது. "பொன்முடி! தூங்கி விட்டாயா?" என்றார். நான் பேச முடியாமல் திணறினேன். விழித்திருப்பதைத் தெரிந்து கொண்டார். "இனி மேல் பதில் பேசாதே! நம்ம குடும்பம் ரங்கூனில் மண்ணாய்ப் போக வேண்டுமா?" என்றார்.

நாங்கள் எத்தனையோ இரவுகள் அழுதிருக்கின்றோம். அழுகை எங்களுக்குப் புதுமையானது அல்ல. ஆனால், அவருடைய சிரிப்பில் என் நெஞ்சத்தைப் பறிகொடுப்பேன். என் மகிழ்ச்சியில் அவர் நெஞ்சம் கலந்துவிடும். அழுகையிலும் அப்படித்தான். என் கண்ணீர் கண்டு அவருடைய நெஞ்சம் கலங்கும். அவருடைய கலக்கத்தைக் காணு முன்னே எனக்குக் கண்ணீர் வரும். எங்கள் துன்பத்தில் இருந்த ஒற்றுமை போல் எங்கள் இன்பத்திலும் இல்லை எனலாம்.

ஆனால், இப்போது எங்கள் துன்பத்தில் எங்கள் அழுகையில் ஒற்றுமை இல்லாமல் இருந்தது. அது ஒரு பெரிய குறையாகவும் தெரிந்தது. அவரை மாற்றுவதற்காக நான் அழுதேன். என் மனத்தை மாற்ற அவர் அழுதார். இருவரும் சிறிதும் மாறவில்லை கலங்கிக் கொண்டிருந்தோம்.

ரங்கூன் பொல்லாத ஊர். அவர் மேல் குறை சொல்லிப் பயனில்லை. இந்த ஊரில் இரண்டு வாரமாக ஒரே அமர்க்களமாக இருக்கிறது. எல்லாரும் வீட்டைக் காலி செய்து வெளியூருக்குப் போவதே பேச்சாகவும் காட்சியாகவும் இருந்தால், அவர் மட்டும் என்ன செய்வார்? இந்த ஊர் இப்படித்தான் இருக்கும். இங்கே உள்ளவர்களில் பெரும்பாலோர் வெளியூரார்; பலர் வெளி நாட்டார். உயிருக்கு ஆபத்து வரும் போது சொந்த ஊரையும் சொந்த நாட்டையும் நினைத்து ஏங்குகின்றார்கள். அந்த ஊர்களிலும் நாடுகளிலும் எமன் வரமாட்டானா? அதுவும் அவர்களுக்குத் தெரியும்! இருந்தாலும், மனம் வலிமை அற்றுப் போகும் போது தாய்நாடு, சொந்த ஊர் என்ற ஏக்கம் உண்டாகின்றது.

சென்னையில் தந்தை வாழ்ந்து கொண்டிருந்த போது, பாட்டனூர்க்குக் காய்ச்சல் வந்த போதெல்லாம் சொந்த ஊரை—கிராமத்தை நினைந்து வருந்தவில்லையா? பாட்டனூர் என்னைக் கூப்பிட்டு எவ்வளவு வேண்டினூர்! "பொன்முடி! அப்பாவுக்குச் சொல் அம்மா! இந்தப் பட்டினத்தில் உயிரை விட்டு விட்டுத் திக்கற்ற பிணமாகச் சாக வேண்டும் என்று அப்பா நினைக்கிருனு? நம்ம பெரியவர்கள் வாழ்ந்து மடிந்த ஊர் செங்காடு. அந்த ஊரில் நம்ம பழைய வீட்டில் போய் உயிரை விட்டு விடுகிறேன். சொல்லம்மா" என்று என்னிடமும் சொல்லி வேண்டினூர். ஒரு தனி மனிதரே மரணம் நெருங்கிய போது இந்தக் கவலைப்பட்டார். இந்த ரங்கூனில் வெளி நாட்டுக்காரர் லக்ஷக்கணக்கானவர்கள். இத்தனை லக்ஷம் மக்களையும் ஆபத்து நெருங்கிய போது, இவர்களுக்கு இறக்கை இருந்தால் பறந்து போய்விட மாட்டார்களா? கப்பல் இல்லை என்று தெரிந்தும் இந்தப் பறக்கும் கவலையை விடவில்லையே! காலால் நடந்து போகவும் துணிந்து விட்டார்களே! இருபது முப்பது மைல் தூரமா? இருநூறு முந்நூறு மைல் தொலைவா? ஒரு நாள் இருநாள் நடையா? இவை யெல்லாம் துன்ப மல்ல. நடந்து போய் எங்கே சேர்வது? எங்காவது போய்ச் சேர முடியுமா? அப்படித் தான் போனுலும் அங்கே எப்படி வாழ்வது? கணவனை இங்கே விட்டு விட்டு மனைவி தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இத்தனை முயற்சியா? என்ன அறியாமை! நாகரிகம் நகரங்களில் என்று சொல்லுகின்றூர்களே? இதுவா நாகரிகம்! ரங்கூன் பெரிய நகரமாம்!

போகிறவர்கள் தங்கள் வரையிலும் போய்த் தொலையட்டுமே! மற்றவர்களை ஏன் வம்புக்கு இழுக்க வேண்டும்? அன்று காலையில் அந்த வாணியம்பாடியம்மா வந்து கேட்டது என்னுல் பொறுக்கவே முடியவில்லை. நான் ஏதோ கவலையோடு காய் அரிந்து விட்டு எதையோ எண்ணிக் கொண்டிருந்தேன். இன்னும் எத்தனை நாள் இப்படி எரிமலையில் நின்று கொண்டிருப்பது என்று கலங்கிக் கொண்டே சமையல்

வேலையிலும் கவனம் இல்லாமல் எண்ணிக்கொண்டிருந்தேன். அந்த வேளையில் அந்த அம்மாவை யார் வரச் சொன்னார்கள்? வந்தவள் சும்மா பார்த்துவிட்டுப் போவது தானே? அல்லது, வேறு ஏதாவது பேசிவிட்டுப் போவதுதானே! "என்ன அம்மா! எப்போது புறப்படப்போகிறாய்?" என்று திருமணத்திற்கு போகிறவர்களைக் கேட்பது போல் கேட்டாள். நான் எப்படித்தான் அதைக் கேட்டுப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? "ஏன் அம்மா! எப்போது சாகப் போகிறாய்? என்று ஒரே கேள்வியாகக் கேட்பது தானே!" என்றேன். உடனே அவளுக்குச் சுறுக்கென்று பட்டதால், "என்னவோ; அந்த மனிதன் சொன்னாரே என்று கேட்டேன். இப்படி நீங்கள் எல்லோரும் உடன் கட்டை ஏறுகிறவர்கள் என்று தெரியாமல் போச்சு" என்று சொல்லிக் கொண்டே முறுக்காக நடந்தாள். சொன்னது சொல்லி விட்டேன். இப்போது என்ன செய்வது? ஆனால், உண்மையாகவே எண்ணிப் பார்க்கிறேன். அவரை இந்த ரங்கூனில் விட்டு விட்டு நான் மட்டும் குழந்தையை அழைத்துக் கொண்டு புறப்படுவது சாகப் போவது போல்தான் தெரிகிறது. இன்னமும் அப்படித்தான் தெரிகிறது. நான் சென்னைக்கோ செங்காட்டுக்கோ போவதாகத் தெரியவில்லை. ஏதோ கண்காணா நாட்டுக்கே சென்று துன்பப்படப் போவதாகத் தெரிகிறது! நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. நெஞ்சம் கொதிக்கின்றது! ஆனால், இவர்கள் எப்படித்தான் வாயால் சொல்கிறார்களோ! தாய்நாட்டுக்குப் போகின்றார்களாம்!—தாய் நாடு—எது? எங்கே?

(தொடரும்)

சாவுக்கு அஞ்சலாமா?

[தென்னாப்பிரிக்கா-டர்பன் ச. மு. பிள்ளை]

சாவு என்ற வார்த்தையைக் கேட்டவுடன், என்னமோ சொல்ல முடியாத அச்சமும் நடுக்கமும் மனிதர் ஒவ்வொருவரிடமும் ஏற்படுகின்றன.

இந்த சாவுப் பயம் அதிகமாயிருப்பதற்குக் காரணம் என்ன? சாவு என்றால் என்ன என்பதையும், பயப்படுவதால் சாவைத் தடுக்க முடியுமா என்பதையும் அறியாததாலேயே சாவு பயம் பலருக்கு அதிகமாயிருக்கிறது. "ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு" என்று பழமொழி சொல்லுவார்கள். அதாவது எப்பொழுதாவது சாவு வரத்தான் போகிறது. என்பது அதன் பொருள். இந்த உண்மையை உணர்ந்தால் சாவுக்குப் பயப்படத் தேவையில்லை. உண்மை வெகு தெளிவாயிருக்கிறது. என்றாலும், அதை உணருவதில்லை. இதனால் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியிலும், ஒவ்வொரு விநாடியிலும் சாகிறார்கள். இது கோழைகளின் போலிச் சாவு. சாவுக்கஞ்சாத ஒருவன் ஒரு முறைதான் சாக முடியும். "வீரர்கள் ஒரே முறையில் சாகிறார்கள். பேடிகள் தினசரி சாகிறார்கள்" என்பது பழமொழி.

சிலர், 'சாகும்போது எப்படி இருப்போம்?' என்று தெரியாததால், சாவைக் கண்டு அஞ்சுவதாகக் கூறுகிறார்கள். இவர்கள் ஆழ்ந்து சிந்தியாதவர்களே. சாவு என்பது ஒவ்வொருவருக்கும் ஒரு தடவைதான் நேரிடும். அந்த அனுபவம் அவர்கள் வாழ்க்கையில் உபயோகப்படக்கூடியதுமல்ல. சாவு வாழ்க்கையின் கடைசி அனுபவம். ஆதலால், வாழ்க்கைக்குப் பயன்படுமளவுக்கு தெரிந்து வைத்துக்கொள்ள முடிவதில்லை. அதை ஒவ்வொருவரும் அனுபவித்துத்தான் தீர வேண்டும். 'மாட்டேன்' என்று சொன்னால் முடியாது. பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தால் அது வராமல் போய்

விடுமா? எப்படியாவது வந்துதானே தீரும்? நடுநடுங்கி நானூறு வருஷங்கள் வாழுவதைவிட, சிங்கம்போல வீரமாய் நடந்து நான்கு ஆண்டுகள் வாழ்வதே சிலாக்கியமல்லவா?

சாவுக்குப் பின்னால் மிஞ்சப்போவது எது? ஏதாவது கொஞ்சம் மிஞ்ச வேண்டுமானால் அதுவே புகழ். அச்சத்தால் நடுங்குவோருக்கு அது கிடைக்கப்போவதில்லை, அவர்கள் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தாலும் என்ன பயன்? ஆகவே, தடுக்கமுடியாத சாவுக்குப் பயப்பட்டு அதனால் புகழை இழப்பதைவிட, கிடைக்கக்கூடிய புகழைப் பெறுவதற்காக தடுக்க முடியாத சாவைக் களிப்போடு வரவேற்பது மேலல்லவா? இதுவே வீரர்களின் பாதை. பெரிய வீரர்கள் இப்பாதையிலேயே செல்வார்கள். இப்பாதை ராஜபாதை, புகழ் மிகுந்தது; ஒளி மிகுந்தது; கௌரவம் மிகுந்தது. இதற்கு இணையானது எதுவும் கிடையாது.

என்றுவது ஒருநாள் சாவு வரப்போவது, கதிரவனும் வெண்மதியும் இருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை. இதற்கு ஏன் பயப்பட வேண்டும்? ஆசை பூர்த்தியாகு முன்பு சாக இஷ்டப்படவில்லையென்று சிலர் சொல்லலாம். அப்படிச் சொல்லுகிறவர்களுக்கு ஒரு கேள்வி. அவர்களுக்கு வயது இவ்வளவுதான் என்று உறுதிகூற முடியுமா? தனக்கு எப்பொழுது சாவு என்று தெரியாத ஒருவன், வீரத்தோடு உயர்ந்த கொள்கைக்காக உயிர்விட வாய்ப்பு நேரும்போது, ஏன் பின்வாங்க வேண்டும்? உயர்ந்த கொள்கையை யாரும் அழிக்க முடியாது. உலகம் உள்ளவரை இருந்துகொண்டே இருக்கும். மகாத்மா சொல்லியதுபோல "சுற்றிலும் எவ்வளவு இருள் இருந்தபோதிலும் விளக்கின் ஒளி நின்றுவிடாது. பொய் எவ்வளவோ மலிந்தபோதிலும் உண்மை மறைந்துவிடவில்லை. எத்தனையோபேர் சுற்றிலும் செத்துக்கொண்டிருந்தாலும், உயிருள்ளவர்கள் இல்லாமல் போகவில்லை." அம்மாதிரியே லட்சியம் — சத்தியம் அழியாது. யார் போனாலும், யார் வந்தாலும் அது ஒளி வீசிக்

கொண்டே யிருக்கும். சாவு எப்படி உண்மையானதோ அதைப்போல உயர்ந்த லட்சியங்கள் அழியாமல் நிலைப்பதும் உண்மை. அப்படியானால் சாவு, ஆறில் வந்தாலென்ன; நூறில் வந்தாலென்ன? எதற்காக பயப்பட வேண்டும்?

தேசாபிமானிகளே!

விவேகானந்தர்

தேசாபிமானிகளாக இருக்க விரும்பும் நண்பர்களே! நீங்கள் முதலில் அன்புணர்ச்சியைப் பெறவேண்டும். வெறும் அறிவினால் மட்டும் ஆவதென்ன? அது சிறிது தூரம் சென்று அங்கே நின்று விடுகின்றது. உங்களிடம் உண்மையில் அன்புணர்ச்சி இருக்கின்றதா?

கோடானுகோடிமக்கள் இன்று மிருகங்களுக்கொப்பான நிலைக்கு வந்துவிட்டனரே என்ற உணர்ச்சி உங்களுக்கு இருக்கின்றதா?

லட்சக்கணக்கான மக்கள் தலைமுறை தலைமுறையாக பல நூற்றாண்டுகளாக பட்டினியால் மடிந்து வாடுகின்றார்களே என்ற உணர்ச்சி உங்களுக்கு இருக்கின்றதா?

அறியாமையானது இருண்ட மேகம்போல் நாட்டைக் கவிந்துகொண்டுவிட்டதே என்பதை நீங்கள் உணருகிறீர்களா? அவ்வுணர்ச்சி உங்களை அமைதியற்றவர்களாக்கி விட்டதா? உறக்கமற்றவர்களாகச் செய்கின்றதா? அஃது உங்கள் இரத்தத்துக்குள் பிரவேசித்து இரத்தக் குழாய்களின் வழியே சுற்றி, உங்கள் இதயத்துடன் சேர்ந்து ஓயாமல் துடித்துக்கொண்டிருக்கின்றதா? அஃது உங்களை அநேகமாய் பித்தர்களாக்கிவிட்டதா? நாட்டின் துக்கம், சீர்கேடு என்ற கவலை உங்களைப் பிடித்துக்கொண்டுவிட்டதா? அதனால் உங்கள் பெயர், புகழ், பெண்டு பிள்ளைகள் சொத்து—சுதந்திரங்கள் எல்லாவற்றையும் மறந்தீர்களா? இந்த நிலைக்கு நீங்கள் வந்துவிட்டீர்களானால், அதுவே தேசாபிமானியாவதற்கு முதற்படியாகும்.

அன்னைக்கு

அன்புள்ள அம்மா,

மதவெறி போர்த்த அரசியல் வெறியே அடிகளைச் சுட்டது என்று நேற்றுவரையில் உண்மையாகவே எண்ணியிருந்தேன். ஆனால் உன் கடிதம் கண்டதும் என் கருத்தெல்லாம் கலங்கியது. 'மதம்,—' 'வெறி' இந்த இரண்டும் சேர்த்துச் சொல்லத்தகாதவை. மதவெறி என்று சொல்வது அமைதியான ஆத்திரம் என்பது போல மதம் என்பது கடவுள் பற்றிய கொள்கை அந்தக் கொள்கைக்கும் வெறிக்கும் பெருந்தொலைவு. கொள்கை அழிந்தால்தான் வெறி பிறக்கும்' என்ற சொற்களை என் நண்பர்களுக்குப் படித்துக் காட்டினேன். அவர்களில் பலர் உடன்படுகின்றார்கள். வெறி கொண்டவன் கொள்கையை உணராதவன் என்பதை அவர்கள் நம்புகின்றார்கள்.

இப்போது எண்ணிப்பார்க்கின்றேன். புத்தர் பெருமானின் பெயரைச் சொல்லிக்கொண்டு கொடுமையை வளர்ப்பவர்கள் இல்லையா? கிறிஸ்து பெருமானின் பெயரைச் சொல்லிக்கொண்டு அணுக்குண்டுகள் செய்பவர்கள் இல்லையா காந்தியடிகள் பெயரைச் சொல்லிக்கொண்டு ஆடம்பரமான திருவிழாவும் கள்ளவாணிகமும் செய்பவர்கள் இல்லையா? அவர்களை எல்லாம் பௌத்தர்கள் என்றும், கிறிஸ்தவர்கள் என்றும், காந்தியன்பர்கள் என்றும் சொல்வது நம் குற்றம் அல்லவா? அதேபோல், கடவுள் எல்லோருக்கும் பொதுத் தந்தை, எல்லாரிடத்திலும் உள்ளவர் என்பதை எள்ளளவும்

றீம்பாமல், கடவுளின் பெயரைச் சொல்லிக் கத்தியை உருவித் திரிகின்றவர்களையும் நெஞ்சில் வஞ்சம் வளர்த்துத் திரிகின்றவர்களையும் மதவாதிகள் என்றும் ஆத்திகர் என்றும் சொல்வது குற்றந்தான். அவர்களை மதவெறியர் என்றும் சொல்லாமல் வெறியர் என்று சொல்லவேண்டும்; ஆத்திகர் என்று சொல்லாமல் நாத்திகர் என்று சொல்லவேண்டும். இன்னும் ஆராய்ந்து பார்த்தால் நாத்திகர் என்று சொல்லவும் தயங்கவேண்டும். ஏன் என்ருல் எல்லோரும் நினைத்தவுடன் நாத்திகராக முடியாது நாத்திகர்க்கு ஆராய்ச்சி வேண்டும்; கடவுள் இல்லை என்ற தெளிவு வேண்டும்; இயற்கை என்ருே, பெர்ஞட் ஷா போல் உயிராற்றல் என்ருே ஒன்றை நம்பும் நம்பிக்கையாவது வேண்டும். ஆகையால் இவர்கள் நாத்திகர் என்று சொல்லப்படுவதற்கும் தகுதியற்றவர்கள்; வெறியர்கள் என்பதே பொருந்தும்.

இப்படிப் பார்த்தால், யாரை இந்துக்கள் என்று சொல்வது? யாரை முஸ்லீம்கள் என்று சொல்வது? யாரைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்வது? மதக் கொள்கைகளை உணர்ந்தவர்களையா? ஏதோ சில பழக்க வழக்கங்களை வைத்துக் கொண்டு, சில சடங்குகளைச் செய்துகொண்டு பெயரை மட்டும் சொல்லித் திரிகின்றவர்களையா? கொள்கைகளை உணர்ந்தவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் நூறு இருநூறு பேர்தான் இருக்க முடியும். அவர்களை மட்டுமே இந்து முஸ்லீம், கிறிஸ்தவர் என்று குறிப்பது தகும். இவர்களுக்கோ மதவேற்றுமையே தெரியாது. இவர்கள் எங்கோ ஒரு மூலையில் உண்மை வாழ்வை நடத்திக்கொண்டு அமைதியாக இருக்கின்ருர்கள். மற்றவர்கள் கோடிக்கணக்காக இருக்கிருர்களே; அவர்களால்தானே வம்பும் துன்பும் வழக்கும் குழப்பமும் கலகமும் கொடுமையும் வளர்க்கின்றன.

இந்தப் பொதுமக்களுக்கும் மதம் என்னும் கடவுள் நெறிக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்று சமயத்தலைவர் களும் உணரவும் உணர்த்தவும் தொடங்கிவிட்டால், நாட்டின்

அல்லலுக்கு உண்மை மருந்து தேடமுடியும். அல்லது, பொது மக்களாவது, கொஞ்சம் பொறுமையோடு எண்ணி, எந்தக் கடவுளைக் காப்பாற்றுவதற்காக இப்படிக் கத்தி உருவுகின்றோம் என்றும், எந்த நெறியைத் தூய்மைப்படுத்துவதற்காக இப்படிக் கொலையிலும் கொடுமையிலும் இறங்குகின்றோம் என்றும் எண்ணிப்பார்க்கக் கூடாதா? அவர்கள் என்ன செய்வார்கள், பாவம்! சில தந்திரமான மூளைகள் தங்கள் தன்னலமே கருதி, தங்கள் பதவி வேட்டையே கருதி, இருக்கின்ற வேறுபாட்டை வளர்த்து மதத்தின் பெயரால் வெறியூட்டுகின்றார்கள்.

"அருமை மக்களே! நம்முடன் வாழும் இன்ன மதத்தாரே நம் வாழ்வுக்கு முட்டுக்கட்டையாக நிற்கிறார்கள். அந்த மதத்தினரால்தான், நம்முடைய மதத்தை அவர்கள் பழிக்கின்றார்கள்; நம்முடைய கடவுளை அவர்கள் இகழ்கின்றார்கள். நம்முடைய பழக்க வழக்கங்களை அவர்கள் தூற்றுகின்றார்கள்" என்றெல்லாம் பலவகையாகத் திரித்துச் சொல்லிப் பொதுமக்களின் மனத்தில் வெறியைத் தூண்டிவிடுகின்றார்கள். பொதுமக்களோ வாழ்க்கையில் பலவகையிலும் குறைக்கும் கவலைக்கும் துன்பத்திற்கும் ஆளாகியிருக்கின்றார்கள். அவர்கள் மனத்தில் பகையு வெறியும் வளர்ந்த பிறகு, அந்நிய மதத்தார் ஒழிந்தால்தான் வயிறாரக் கஞ்சி குடிக்க முடியும், கவலையற்று வாழ்க்கை நடத்த முடியும். பழங்காலம் போல் நம் மதத்தின் பெருமையும் கடவுளின் பெருமையும் ஓங்கும் என்றெல்லாம் பொருளாதார முன்னேற்றத்தையும் மற்றொன்றையும் சேர்த்துக் குழப்பிக்கொண்டு, கத்தியை உருவிக்கொண்டு வெளியே புறப்படுகின்றார்கள். யார்யாரோ விளைத்த வினையெல்லாம் சேர்ந்து, உலகத்தலைவர் காந்தியடிகளின் உழைப்பையெல்லாம் கொண்டது; இறுதியில் உயிரையும் கொண்டது: இனியாவது, இந்து—முஸ்லீம் ஒற்றுமை, வெறியற்ற அமைதியான வாழ்க்கை இந்தியக் கண்டத்தில் ஏற்படுமா?

நானும் எண்ணி எண்ணிப் பார்த்தேன். அம்மா! எப்படி ஏற்படும்? உண்மையை வெளிப்படையாகச் சொன்னால்தான் ஏற்படமுடியும். பிரிவினையாகாத பெரிய குடும்பத்தில் அண்ணன் தம்பிமார் அன்றாடம் போராடிக் கொண்டு குடும்பத்தைக் கலகலக்கச் செய்கின்றார்கள். அண்ணன் பொல்லாதவன், அவன் தொலைகின்ற வரைக்கும் என்னால் ஒத்துழைக்க முடியாது என்று ஒரு தம்பி சொல்கிறான். இந்தத் தம்பி வஞ்சகன், என்னைப் பற்றி என்னென்னவோ சொல்லித் தூற்றுகின்றான், இவனாவது குடும்பத்தைவிட்டு வெளியேற வேண்டும், அல்லது நானாவது ஒழிந்துபோகிறேன் என்று இன்னொருவன் முறையிடுகின்றான். இப்படிப்பட்ட குடும்பத்தில் புகுந்து, "அண்ணன் பொல்லாதவனல்ல, தம்பியும் வஞ்சகன் அல்ல, இருவரும் ஒரு வயிற்றில் பிறந்தவர்கள், அப்படியிருக்கும்போது, வேறு வேறு குணம் எப்படி இருக்க முடியும்? அதை நம்பவேண்டாம். இருவரும் நல்லவர்கள். நான் சொல்லுகிறேன், நம்புங்கள் நீ வேறு அல்ல, அவன் வேறு அல்ல; இருவரும் ஒருவரே; சான்று வேண்டுமானால் இந்த நூலில் இத்தனையாவது பக்கத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று கோடிமுறை எடுத்தெடுத்துச் சொன்னாலும் பயன் உண்டா? அதைவிட, அந்தக் குடும்பத்தின் உண்மையான போராட்டத்திற்குக் காரணம் பொருளாதார நிலையே என்பதையும், ஒருவன் சிறிது உழைப்பால் பெருநன்மை அடைகின்றான் என்பதையும், மற்றொருவன் பெரும்பங்கு உழைத்தும் சிறு நன்மையே பெறுகின்றான் என்பதையும் தெளிவாக உணர்ந்து, ஒளிப்புமறைப்பு இல்லாமல் அதை எடுத்துச் சொல்லி, உழைப்பையும் நன்மையையும் பங்கிட்டுத் தக்க ஏற்பாடு செய்தால் தொல்லையெல்லாம் ஒழியுமே!

நூற்றுக்குத் தொண்ணூறு குடும்பங்களில் கணவன் மனைவி ஒற்றுமையில்லாத குறையெல்லாம் காதல் இல்லாத குறையா? காசு இல்லாத குறையா? காதலின் அடிப்படையில் வாழ்க்கை தொடங்கிய நல்ல இளைஞர்கள் பலர் பொல்

லாத முறிவுகளுக்கு ஆளாவதை நாம் பார்க்கவில்லையா? காதலே கனவிலும் இல்லாத பணக்காரக் குடும்பங்களில் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அடிக்காமல், அழிக்காமல், பகைக்காமல், பழிக்காமல், தம் தம் விருப்பம்போல் வாழ்ந்து வெளியார் கண்ணுக்கு அமைதி தோன்ற நாளைக் கழிக்கவில்லையா? காதல் இருந்தும் பண்பாடு இருந்தும், மானம் இருந்தும், பொறுமை இருந்தும், பல குடும்பங்களில் ஒற்றுமை அற்ற இல்லற வாழ்க்கையைப் பார்க்கவில்லையா? இந்தக் குடும்பங்களில் உள்ள கணவன்மாருக்கும் மனைவிமாருக்கும் நாள்தோறும் அன்பு வாழ்க்கையின் பெருமையை எடுத்தெடுத்துச் சொல்லியும் பயன் உண்டா? அகநானூற்றையோ நற்றிணையையோ குறுந்தொகையையோ உணர்ந்து உணர்ந்து ஓதினாலும் பயன் உண்டா? இவர்களின் குறைகளை வேறு வேறு பெயரால் சொல்லலாம்: அவன் ஆத்திரக்காரன், இவள் சிடுமூஞ்சி, அவன் ஒழுக்கங் கெட்டவன், இவள் மதிப்பு இல்லாதவள், அவன் இரக்கமற்றவன், இவள் அறிவு இல்லாதவள் என்று ஆயிரம் குறைகளைச் சொல்லலாம் இவைகள் எல்லாம் நோய் நாடுதல் என்று திருவள்ளுவர் சொன்ன நிலைதான். நோய்முதல் நாடுதல் அல்ல. அவர் சொன்னதுபோல், நோயின் அடிப்படையைக் காணவேண்டாமா? அடிப்படை எப்படி எப்படி இருக்கும்? ஒரு குடும்பத்தில் நூல் சேலை நாலைந்து வேண்டுமே என்ற ஏக்கத்தால் போராட்டம் வேர் கொண்டு வளர்ந்திருக்கும். மற்றொரு குடும்பத்தில் பட்டுச் சேலை ஒன்றுகூட இல்லையே என்ற பெயரால் அது புறப்பட்டிருக்கும். இன்னொரு குடும்பத்தில் "அந்த வீட்டுக்கார அம்மாவிடம் இருப்பதுபோல் நான் இருபது பட்டுச் சேலையா கேட்கிறேன்? பத்துப் பட்டுச் சேலைதானே கேட்கிறேன்" என்பதில் தொடங்கியிருக்கும். ஒரு குடும்பத்தில் "எத்தனை நாள் காதில் ஓலை போட்டுக்கொண்டு தெருவில் திரிவது, ஒரு சிவப்புக் கம்மல் வேண்டாமா" என்று முளைத்திருக்கும். இன்னொரு குடும்பத்தில், "எல்லாரும் வெள்ளைக்கல் தோடு போடும்போது, நான் சிவப்புக்கல் தோடு

[illegible]ட்டுக்கொண்டு வெளியே போவதா?" என்று அரும்பியிருக்கும். மற்றொரு குடும்பத்தில், "எவ்வளவோ செலவு செய்கின்றீர்களே! ஒரு வைரக்கல் இழைத்த தோடு வாங்கிக் கொடுக்க மனம் வரவில்லையே" என்று மலர்ந்திருக்கும். மற்றுமொரு குடும்பத்தில், "உங்கள் மோட்டாரை நம்பினால் நேரத்தோடு கிளப்புக்குப் போக முடியவில்லை; எனக்குத் தனி மோட்டார் வேண்டும், தனி டிரைவரும் வேண்டும்" என்று கால் கொண்டிருக்கும்.

இந்த அடிப்படைகள் அமைந்த வாழ்க்கைக் குறைகளை எண்ணிப் பார்க்காமல், சீதையையும், தமயந்தியையும், கண்ணகியையும் மங்கையர்க்கரசியையும் எடுத்துக் காட்டாகக் கோடி முறை சொன்னாலும் நோக்கம் நிறைவேறுமா? நோய் முதலை நாடாமல் நோய்க்கு மருந்து கொடுத்தால், காசும் பெயரும் பெற்று வைத்தியர் வீட்டுக்குத் திரும்பலாம்; அதற்குமேல் பயன் உண்டா? எடுத்துச் சொல்லுகிறவரும் நல்லவர், உத்தமர் என்று பெயரெடுக்கலாமே தவிர, உலகத்திற்கு நன்மை விளையுமா? ஆகவே, குடும்பங்களைத் திருத்த விரும்பினால், இந்தச் சமூக நிலையில் பொருளாதார ஏற்றத் தாழ்வு இப்படி இருக்கின்ற வரையில், எல்லாம் வெறும் பேச்சுத்தான், வெறும் ஏட்டளவுதான். அதனால், முதல் கடமை பொறாமைக்கும் குறைக்கும் இடம் இல்லாதபடி எல்லாருக்கும் உழைப்பையும் பொதுவாக்கி ஊதியத்தையும் சமமாக்கவேண்டும் அல்லவா?

இந்த உண்மையைச் சமுதாயத்திலும் உணர்ந்துவிட்டால், ஒரே நாளில் இந்து-முஸ்லீம் பிணக்கைத் தகர்த்து எறியலாமே! யார் உணர்ந்து உணர்த்த வல்லவர்கள்? "இந்துக்களே! உங்கள் மதம் ஒரு கொள்கை! முஸ்லீம்களே! உங்கள் மதம் ஒரு கொள்கை! கொள்கைகளை யாரும் அழிக்கவோ கெடுக்கவோ முடியாது. காப்பது கடவுளின் பொறுப்பு. அவருடைய வேலையை நீங்கள் செய்துவிட முடியுமா? செய்வதாக எண்ணுவது குற்றம் அல்லவா?

அந்த நெறியை உங்கள் மனத்தளவில் வைத்துப் போற்றி உண்மையாக நடவுங்கள். ஆனால், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் படும் துன்பங்களுக்கும் குறைகளுக்கும் காரணம் வேறு மதம் அல்ல, வேறு நெறியல்ல; உங்கள் மனத்தைக் கெடுக்கும் சில தலைவர்களின் வெறியே காரணம். அவர்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். நீங்கள் எண்ணிப் பாருங்கள். உங்கள் வயிறு நிரம்பவில்லை; உங்கள் வீடு நிரம்பவில்லை; உங்களுக்கு உடை போதவில்லை; சிறுவர்களின் கல்விக்கு வாய்ப்பு இல்லை; உடம்புக்கு வளர்ச்சி இல்லை; வாழ்வுக்கு வழி இல்லை. இவ்வளவுக்கும் காரணம் கோயிலும் அல்ல. மசூதியும் அல்ல. ஆனால் உங்கள் உழைப்பு உங்களுக்குப் பயன்படாதபடி தடுக்கும் தடைகள், உழைத்தவர்களுக்குப் பயன் கிட்டுவதில்லை; உழைக்காதவர்களுக்குப் பயன்போய்ச் சேர்கின்றது; அவர்கள் இருக்குமிடம் தேடி, நிதிநிலையம், பங்கு மார்க்கெட்டு, பெருத்த வாணிகம், தொழிற்சாலை முதலியவைகளின் வாயிலாக அவர்களுக்குப் பயன் எல்லாம் போய்ச் சேர்கின்றது. இனிமேல், "அந்த நிதிநிலயத்தையும் பங்கு மார்க்கெட்டையும் வாணிகத்தையும் தொழிற்சாலையையும் அரசியலாளராகிய நாங்களே உங்கள் சார்பாக நடத்தப் போகின்றோம். உங்கள் உழைப்பு இனிமேல் உங்களுக்கே பயன்தரும். யார்மேலும் பகைவேண்டாம். அமைப்பின் மேல் வெறுப்புக் கொள்ளுங்கள். அந்த அமைப்பை மாற்றி அமைக்கலாம்; எங்களோடு சேர்ந்து ஒத்துழையுங்கள்" என்று அரசியல் தலைவர்கள் ஒரு நாள் காலையில் உள்ளம் திறந்து சொல்லட்டும். அன்று மாலையிலேயே இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்குக் கால்கோள்விழா நடத்தியாகுமே!

இதைச் செய்வார் யார் அம்மா! பொறுத்துப் பார்ப்போம். இதற்காக வாழ்ந்து இதற்காகவே பலியான ஒரு பெருந் தலைவர் தம் கையாலேயே எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார். அந்த மரண சாசனத்தைப் படித்து உருகும் தலைவர்களே இப்போது தேவை. "இப்போது பெற்றிருப்பது எளிய அரசியல் விடுதலையே. இனிப்பெற வேண்டிய

உரிமைகள் பொருளாதார உரிமையும், சமூக உரிமையும் அறஉரிமையுமாகும். அவற்றுக்காகப் பாடுபடுவதே இனி உள்ள கடமை'' என்ற அடிகளின் அரிய எழுத்தை மறை மொழியாக மதித்துச் செயலாற்ற முற்படுவார்களா ?

ஏ, இந்தியாவே ! தந்தை இழந்த நாடே ! மதம் வேறு, வெறி வேறு. உள்ள குறை வேறு ; அதற்கு உரிய மருந்து வேறு. மருந்தைத் தேடி உண்டு நலம் பெறுவாயா ? இனியும் மதிகெட்டு வெறிபிடித்து அலைவாயா ?

வணக்கம், அம்மா.

அன்புள்ள மகன்

எழில்.

நீதித்தேறு

—— கா. மு. ஷெரீப். ——

வெட்டிக்கு வித்திடு பேதம்தனை இங்கு
வேண்டாம் மடமையின் வித்ததுவாம் !
எட்டி உதைத்திடு பணத்திமிர் கொண்டுமே
ஏழையைச் சாடிடும் எத்தர்களை

நெட்டிக் கழுத்திடை கை கொடுத்தே தள்ளு
நேர்மைக் கிடர் செய்யும் மானிடரை
குட்டை குழப்பிடும் கொள்கை வேண்டாம் தமிழ்
கொண்டு அரசொன்று கண்டிடுவோம் !

எல்லாத் தமிழர் மாநாடு

'ஞானம்'

தமிழரசுக் கழகம், தமிழகத்தில் தமிழரசு காண்பதொன்றே இன்றைய அவசரப் பிரச்சினை என்று ஓயாது பிரசாரம் செய்தது. உரிமையைப் பெற்ற பின்னர் உறவைப்பற்றிப் பேசுவோம் என்று உறுதியும் கூறியது. என்றாலும், "ஐயோ, இது தேசீயத்திற்கு தீங்கிழைக்கும் கோஷம்" எனக் குசுகுசுப் பிரசாரம் நடந்தது காங்கிரஸ் கோட்டையிலே.

ஆனால், கோவையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கண்டதென்ன? தனித் தமிழரசு கொள்கைக்குப் பிரதிநிதிகளிடையே பேராதரவு; தலைவராலும் அடக்கமுடியாத ஆரவாரக் கூச்சல்; "தமிழரசு வேண்டும்" என்ற வீரம் மிக்க கோஷம், இத்தனையும் மூவர்ணக் கொடியின்கீழ் காண முடிந்தது. உண்மை உழைப்பின் பலன்.

இதோ, இன்னொரு மாறுதல்! "தமிழகத்தின் சொத்தைப் பறிக்க முயல்பவரிடம் 'திராவிடர்' என்று சொந்தம் பாராட்டுவது தன்மானமல்ல; வடநாட்டின் ஆதிக்கத்தைத் தகர்க்க சாதி, சமய, கட்சி பூசல்களைத் தள்ளிவைத்து ஒன்றுபடுவோம்வாரீர்!" என்று திராவிடக் கழகத்தினருக்கு அழைப்பு விடுத்தது தமிழரசுக் கழகம். திராவிடக் கழகத் தலைவர்கள் இதைப்பற்றிச் சிந்தனை செய்யாது சீற்றங்கொண்டனர். "தமிழர், தமிழரசு என்பதெல்லாம் ஆரிய அடிவருடிகளின் பேச்சு" என்றனர். ஆனால், இன்றோ, திராவிடக் கழகத் தலைவரின் ஆதரவுபெற்று, அதன் அன்பர்கள், அனுதாபிகளால் நடத்தப்பட்ட 'எல்

… தமிழர்' மாநாடு, "வேண்டியது தமிழரசேயன்றி, திராவிடஸ்தானல்ல" என்று தெளிவாகத் தீர்மானித்துள்ளது.

'எல்லாத் தமிழர்' மாநாட்டில் உள்ளும் புறமுமாக ஊடுருவி நின்ற திரு. எஸ். முத்தையா முதலியார் திருச்சியிலும் கடலூரிலும் கூடிய திராவிட மாநாடுகளில் தலைமை தாங்கியவர். "திராவிடஸ்தான்" என்ற நூல் எழுதி, "நமக்கு வேண்டுவது தமிழரசல்ல; திராவிடஸ்தான்" என்று வற்புறுத்தியவர். பெரியாரின் அந்தரங்க நண்பர்; அரசியல் ஆலோசகரும்கூட. இத்தகையவர் தலைமையில் கூடிய ஆரம்பக் கூட்டம்தான் திரு. வேங்கடேச ஐயங்காரை 'எல்லாத் தமிழர்' மாநாட்டின் வரவேற்புத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. கடலூர் திராவிட மாநாட்டில் திராவிட நாட்டுப் படத்தைத் திறந்த, திரு. பி. பாலசுப்பிரமணியம் வரவேற்புக் குழுச் செயலாளராகவும், திராவிடர் கழக அன்பரான திரு. டி. சண்முகம் பிள்ளை பொருளாளராகவும் திகழ்ந்தனர்.

பெரியார் ஈ. வே. ராவும் மாநாட்டை ஆதரித்தார். சென்னைக் கூட்டமொன்றில் கேள்விக்குப் பதிலாக, "அகிலத் தமிழர் மாநாட்டை ஆதரியுங்கள்; வரவேற்புக் குழுத் தலைவர் ஆரியர் என்பதற்காக அஞ்சவேண்டாம்" என்று தமது கழக ஊழியர்களுக்கு அறிவித்ததாக 'விடுதலை' வெளியிட்டிருந்தது. திராவிடக் கழகத் தலைவரின் ஆசியுடன் திராவிடக் கழக அன்பர்களால் நடத்திவைக்கப்பட்ட 'எல்லாத் தமிழர்' மாநாட்டில் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் திரு. சி. ஆர். சீனிவாசன், இந்து மகா சபைத் தலைவர் திரு,

கே. எஸ். ராமசாமி சாஸ்திரி போன்ற அந்தணர்களும் அவையேறிப் பேசினர்.

இதிலிருந்து "இன்று வேண்டியது சாதிச் சண்டையல்ல, தமிழ் நாட்டவரின் ஒற்றுமை" என்பதைத் திராவிடக் கழகப் பிரமுகர்கள் உணரத் தொடங்கிவிட்டனர் என்பது தெளிவாகிறது.

'திராவிடஸ்தான்' பேச்சும் பின்னணிக்குப் போய் விட்டது. மாநாட்டில், "தமிழர் வாழ, தமிழகத்தில் தனியரசு நிறுவியாக வேண்டும். பிறமொழியினர் சேர விரும்பினால் சேர்த்துக்கொள்வோம்" என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தீர்மானம், மாநாட்டில் பங்குகொண்ட திராவிட கழக அன்பர்களின் ஆமோதிப்பும் பெற்று ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது. "சேருவார்கள்" என்று நம்பினது நடக்கவில்லை. ஆகவே, "சேர விரும்பினால்......" என்று வாசகம் மாறிவிட்டது. உறவுக்கு நாமே மனுப் போடவேண்டும் என்றவர்கள் கோட்டையிலே, நாம் நமது "உரிமையில் நாட்டங்கொள்வோம். ஆந்திரரும், பிறரும் நம்மிடம் உறவுக்கு மனுப்போட்டால் தள்ளிவிடமாட்டோம்; தழுவிக் கொள்வோம்" என்று புதுக் குரல் கேட்கிறது. ஆனால், குரல்மட்டும் மாறிப் பயனில்லை. 'இதுதான் திராவிடக் கழகத்தின் கொள்கை' என்று கூறவேண்டும். பிற கட்சியினருடன் கூட்டுறவும் கொள்ளவேண்டும். தமிழ் இனத்தைப் பிளவுபடுத்தும் பிரச்னைகளைக் கைவிடவேண்டும். திராவிட கழகத்தார் செய்வார்களா?

* * *

எல்லாத் தமிழர் மாநாட்டில், திரு. வி. க., திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் போன்ற மக்களின் மதிப்பிற்குரிய பலர் பங்கு கொண்டிருந்தும், பண மூட்டைகளும், நிலப் பிரபுக்களும், தேர்தல் காலத்தை எதிர் நோக்கித் தமிழரசுக் கோஷமிடும் பதவி வேட்டையாளர்களும் எல்லாத் தமிழர் மாநாட்டின் நடவடிக்கைகளில் நஞ்சைக் கலந்துவிட்டனர். மக்கள் விரும்பும் ஜமீன்தாரி ஒழிப்பு மசோதாவை தமிழகம் தனியாகும்வரை தள்ளிப் போடவேண்டுமாம்! இதை மாநாடு 'எல்லாத் தமிழர்' பெயரால் ஏற்றுக்கொண்டது. இது எப்படி எல்லாத் தமிழர்களின் எண்ணமாகும்? ஊத்துமலை ஜமீன்தாரின்—அவரைக் கொடியேற்றி வைக்க அழைத்தவர்களின் எண்ணமாயிருக்கலாம். ஆனால், தமிழர்—ஆந்திரர் பிரிவினையைப் பயன்படுத்தி சுயநலச் சுரண்டல் கூட்டம் முன்னேறுவதற்கு தமிழர் இனியும் இடந்தரப்போவதில்லை. பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் என்ற பிரிவினையைப் பயன்படுத்தியதுபோல், இதையும் பயன்படுத்த எண்ணுவோர் ஏமாறப்போவது திண்ணம்!

கோவை முதலாளி ஜி. டி. நாயுடு தமிழகம் வடநாட்டுடன் எவ்விதத்தும் தொடர்பற்ற 'தனியரசு' காணவேண்டுமென்று பேசியதோடு, அதே போக்குடைய தீர்மானம் ஒன்றினையும் மாநாட்டில் பிரேரேபித்திருக்கின்றார். அத் தீர்மானத்தை மாநாடு 'ஏகமனதாக' நிறைவேற்றியிருக்கின்றது. தனியரசு கோருவதில் குற்றமில்லை. அது தமிழர் பிறப்புரிமை. ஆனால் அந்தத் தனியரசு, பிரியும் உரிமையுடன் இந்தியாவோடு இணைந்திருக்க வேண்டுமே ஒழிய, 'தனித்திருக்கக் கூடாது. ஜனாப். ஜின்னா காட்டிய பாதையில்' செல்ல விரும்புவோர் மக்களுக்கு நன்மை செய்பவர்களல்ல.

தமிழர் தனி இனம் என்று தமிழரசுக் கழகம் கூறுவது உரிமையைப் பெறவே ஒழிய, உலகத்தோடு ஒட்டாது ஒதுங்கி வாழ்வதற்கல்ல. இனம் இனமாக, நாடு நாடாக உலகமும் உலக மக்களும் பிரிந்திருப்பினும் அப்பிரிவினை வழி உரிமையை வழங்கி, பின்னர் இனத்தோடு இனத்தை நாட்டோடு நாட்டை முடிபோட்டுச் சமஷ்டியாக்க முயல்கிறது உலகப் பாட்டாளி வர்க்கம். அந்த முடிச்சை அவிழ்க்க முயல்கிறது முதலாளி வர்க்கம். பின்சொன்ன அந்த திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் தமிழ் நாட்டிற்கு வேலி கட்ட விரும்புகின்றனர்.

தமிழ் நாட்டைப் பிரித்து வைக்க வடநாட்டு முதலாளித்வம் தனக்கிழைத்த கொடுமையைச் சான்றாக காட்டுகிறார் திரு. ஜி. டி. நாயுடு. இது முதலாளி வர்க்கத்தின் குடும்பச் சண்டை போன்றது. வடநாட்டு முதலாளித்வம் வளர்ந்து கொடுத்துத் தங்களுக்கு வாழ்வளித்தால் இந்தத் திருக்கூட்டம் வடநாடு, தென்னாடு என்ற வேற்றுமையின்றி முதலாளி வர்க்க முகாமிலே இரண்டறக் கலந்து விடும் என்பதில் ஐயமில்லை. இவர்கள் தனியரசு கேட்பது தன்னலத்திற்கே ஒழிய, தமிழ் இனநலத்திற்கல்ல. முதலாளித் தமிழர்கள் வேண்டுவது சுரண்டுவதற்கு நிலம். அது வேங்கடத்திற்கப்பால் விந்தியம் வரை விரிந்திருந்தால் நல்லது. அதனால்தான் திரு. ஜி. டி. நாயுடு தென் இந்தியாவுக்கு தனி மத்திய சமஷ்டி வேண்டுமென்கிறார்.

ஆனால், தமிழரசுக் கழகம் வேண்டுவது சுரண்டு நிலமல்ல; சொந்தத் தாயகம். அதன் வடக்கெல்லை வேங்கடம். அதில் ஒரு அங்குலத்தைக்கூட கழகம் விட்டுக் கொடுக்காது.

'எல்லாத் தமிழர்' மாநாட்டினர் தமிழகத்தின் வடக்கெல்லை, வடபெண்ணையாறு என்கின்றனர். இதற்கு வரலாற்றில் ஆதாரம் உண்டென்றாலும், செயலில் வம்பை வளர்க்கும். காரியத்திற்கு ஒவ்வாததும் கருத்து வேற்றுமைக் கிடமுள்ளதுமான விஷயங்களில் தலையிட்டு மாநாட்டின் பயனைக் கெடுத்துவிட்டனர். தமிழகத்தின் தெற்கெல்லையை மீட்க அங்குள்ள தமிழர் வீரப்போர் புரிகின்றனர். அடி, உதை, குத்து, வெட்டு, ஆகிய கொடுமைகளெல்லாம் அங்கு அன்றாட நிகழ்ச்சிகளாய் விட்டன. துப்பாக்கி வேட்டுக்கும் பலர் பலியாகிவிட்டனர். மற்றும் புதுவை, காரைக்கால் பிரதேசங்களை பிரெஞ்சுக்காரர் பிடியிலிருந்து மீட்டு தமிழகத்தோடு சேர்க்க அங்குள்ள மாணவர்களும் மக்களும், ஆவியையும் அற்பமென மதித்து அறப்போர் புரிகின்றனர். இந்தப் போராட்டங்களைப்பற்றி 'எல்லாத் தமிழர்' மாநாட்டில் பேச்சே கிடையாது. தமிழ்ப் புலவரைக் குந்தவைத்து நிலப்பிரபுக்களும், முதலாளிகளும் தங்கள் நலன்களுக்குப் பரிந்துபேச மாநாட்டினரைப் பயன்படுத்திக்கொண்டனர். இதுதான் எல்லாத் தமிழர் மாநாட்டின் பலன்.

தமிழரசில் முஸ்லிம்கள்

சா. மு. ஷெரீப்

உலக நாடுகளில், ஒன்ருே, பலவோ அரசியல் கட்சி, அல்லது கட்சிகள் இல்லாத நாடே கிடையாது! இருப்பினும் இந்தியாவைத் தவிர வேறு நாடுகளில் உள்ள அரசியல் கட்சிகளில், "எங்கள் கதி என்ன?" என்று மதத்தின் பெயரால் கேட்கும் மக்கள் கிடையாது. ஆனுல் இந்தியாவில் அதிலும் குறிப்பாக எனது மதத்தினர் (முஸ்லீம்கள்) மட்டும் எந்த அரசியல் கட்சியில் சேர்கிறதானுலும் "எங்கள் பங்கு என்ன?" என்ற கேள்வியைத்தான் முதலில் கேட்க ஆரம்பிக்கிருர்கள். இந்திய விடுதலைப் போராட்டத்தில் கிளப்பிய இந்த வாதம் பாகிஸ்தான் பிரிந்த பின்பும்கூட விட்டபாடில்லை!". ஆகவே முஸ்லீம்களின் மனுேநிலையைச் சரிகட்ட வேண்டுவது இன்றைய ஆட்சியாளர்களாகிய காங்கிரஸ் வாதிகளின் கடமைகளில் முக்கியமானதாக இருக்கிறது. ஆட்சியாளரும் முஸ்லிம்களைப் பார்த்து, "நாமெல்லாம் இனியாவது ஒன்ருக வாழலாம் லீகைக் கலைத்து விடுங்கள்" என்கின்றனர். முஸ்லீம்களைச் சந்தேகித்து அவர்களிடம் தவறுதலாக நாம் நடந்துகொண்டால் அது நம் நாட்டிற்குத்தான் ஆபத்து. பல தலைமுறைக்கு முன்பு அடிமைப்பட்ட நாம் இப்பொழுதுதான் விடுதலை அடைந்தோம். ஆனுல் நாட்டில் அராஜகம் நடந்துகொண்டே இருக்குமானுல், அடைந்த விடுதலை (சுதந்திரம்) நம்மைவிட்டுச் சொல்லாமலேயே சென்றுவிடும்" என்று அண்ணல் மகாத்மா தன் ஆவி பிரியும் நிமிஷம்வரையிலும் சொல்லிவந்தார். அதற்காகவே உயிர் துறந்தார். அண்ணலின் அறவுரை நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறதென்ருலும் நாம் இன்னமும் ஒன்ருகப்போக மனமொப்பவில்லை.

என்னதான் கதர்உடையில் திகழ்பவரானுலும், எத்தனை முறை தேச விடுதலைக்காகச் சிறைசென்று மீண்டவரானுலும் முஸ்லீமாக இருந்தால் மற்றவர்களால் சந்தேகிக்கப்படுகிருர்.

அதே போன்று முஸ்லீம்களுடன் எத்தனை தூரம் இணைந்து போகிறதாக விருந்தாலும் லீக் அல்லாத எந்த அரசியல் ஸ்தாபனத்தையும் முஸ்லீம்கள் நம்பப் பயப்படுகிருர்கள். இந்தநிலை ஏன்? இதுவிரும்பத்தக்கதா? இல்லை என்ருல் காந்தி அடிகளின் உபதேசப்படி இதை மாற்றி அமைக்க நாம் பாடுபட வேண்டாமா?

இங்கே ஒரு சந்தேகம் தோன்றலாம். கதர்கட்டும் முஸ்லிம் என்ருல், சிறைசென்ற முஸ்லிமென்ருல் அது தேசீய முஸ்லிம்களைத்தானே குறிக்கும்? தேச விடுதலைக்காகக் காங்கிரசுடன் சேர்ந்து சொந்த மதத்தவரால் "சண்டாளன்" என்ற சவுக்கடிபோன்ற சொற்களையும் அடி, உதைகளையும் பட்டுக்கொண்டு இந்தத் தேசத்துக்காகப் பாடுபட்ட தேசீய முஸ்லிம்களைகூடவா வேற்றுக் கண்கொண்டு நாட்டில் பார்க்கின்ருர்கள்" என்பதுதான் உங்களின் சந்தேகம். நியாயமான சந்தேகம்தான். ஆனுல் நடக்கிறது! நாட்டிலல்ல; நம் காங்கிரஸில்.

அண்மையில், சென்னைப் பாராளும் மன்றத்தில் இந்த மாகாணத்தில் சமாதானத்தை ஏற்படுத்த ஸ்பெஷல் போலீஸ் படையை அமைக்க ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது உங்கட்கெல்லாம் ஞாபகமிருக்கலாம். அந்த ஸ்பெஷல் போலீஸில் முஸ்லிம்கள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள் என்கிறது சென்னை அரசாங்கம்.

"இதிலென்ன தவறு இருக்கிறது? முஸ்லீம்கள் பாகிஸ்தானை ஆதரித்தவர்கள். ஆகையால் அதற்குள் அவர்கள் மனசில் ஊறிப்போன பாக்கிஸ்தான் பித்தம் விட்டுப்போய் இருக்காது. ஆகவே அவர்களை நாட்டுப் பாதுகாப்புப் படையில் சேர்ப்பது ஐந்தாம்படைக்கு இடம் கொடுத்ததுபோலாகாதா?" என்று கேட்கலாம். ஆனுல் "லீக் முஸ்லிம்களைச் சேர்த்துக்கொள்வதில்லை!" என்பதல்ல. "முஸ்லிம்களையே சேர்த்துக்கொள்வதில்லை" என்கிறது அரசாங்கம். அடிபட்டு உதைபட்டு நாட்டின் விடுதலையைக் கண்டானே தேசிய முஸ்லிம், அவனுக இருந்தாலும்கூட அந்த வேலைக்கு (ஸ்பெஷல் போலீஸிற்கு) மனுப் போட்டால் அவன் பெயரைப் பார்த்தமட்டிலேயே முஸ்லிம் என்றிருப்பதால் உடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிடும். இது சரியா? தனி ஸ்தாபனம் முஸ்லிம்களுக்கு ஆகாதென்று சொல்லப்படும்போது, முஸ்லிம்களும் இந்த நாட்டுப் பிரஜைகளென்றிருக்கும்போது ஏன் அவர்களைமட்டும் ஒரு குறிப்பிட்ட பதவிக்கு லாயக்கில்லை என்று ஒதுக்கவேண்டும்? லீக் முஸ்லிம்களிடத்திலே நம்பிக்கை இல்லாதிருக்கலாம். ஆனுல் முஸ்லிமாக பிறந்தவனையே நம்பமறுப்பது முறையாகுமா? ஜின்னுசாயபு, தன் பாக்கிஸ்தான் கோரிக்கையின்போது இதைத்தானே சொன்னுர். அதாவது காங்கிரஸ், ஹிந்து ஸ்தாபனம் என்று. அப்போது நாங்கள் (தேசிய முஸ்லிம்கள்), "அப்படி

யெல்லாம் அரசியலில் மதத்தைப் புகுத்தக்கூடாது; காங்கிரஸ் வகுப்புவாத ஸ்தாபனம் அல்ல'' என்று நாடு முற்றிலும் சுற்றிப் பிரசாரம் செய்தோம். ஆனால் அதன் பலன்......?

சட்டம் இயற்றியவர்கள் சற்று நிதானம் காட்டி இருந்தால் இந்தத் தவறு நேர்ந்திருக்காதல்லவா? முஸ்லிம்களை ஸ்பெஷல் போலிஸில் சேர்த்துக்கொள்ளத்தான் வேண்டுமென்பது என் கட்சியல்ல. இவ்வாறு பிடிவாதமாகச் சட்டங்களைச் செய்து கொண்டு போவதினால் லீக் முஸ்லிம்களிடையே மன மாறுதலை ஏற்படுத்தப் பாடுபடும் எம்போன்றார் வெற்றி பெறுவது தடைபடுமென்றே அஞ்சுகிறேன். இப்படிப்பட்ட சம்பவங்களால்தான் சென்னை மாகாண முஸ்லிம்கள் குறிப்பாகத் தமிழ் நாட்டு முஸ்லிம்கள் 'காங்கிரஸின் எதிரிகள் எல்லாம் எமது நண்பர்கள்' என்ற எண்ணத்தால் காங்கிரஸைப் பகைக்கும் கட்சிகளை ஆதரிக்கும் நிலை ஏற்பட்டது.

மேலிடத்தார் உத்தரவு என்பதற்காக எதையும் செய்யுமளவிற்கு நம் மாகாணம் நடந்து கொள்வது சரியாகாது! வடநாட்டில் முஸ்லிம்கள் மதவெறியர்களென்றால் அதற்குத் தென்னாட்டில் என்ன வந்தது? அதுவும் தமிழ் நாட்டில் தொன்று தொட்டு இந்துக்களோடு அண்ணன் தம்பியாக—மாமன் மச்சான்களாக முறை பேசி வாழ்ந்து வரும் தமிழ் முஸ்லிம்களிடத்தில் இதர தமிழர்கட்குச் சந்தேகம் என்றால் இது விந்தையாக இல்லையா? மேலிடத்தார் எதைச் சொன்னாலும் அதை நாம் அப்படியே செய்தாகவேண்டும் என்ற நிலை உடனடியாக நம்மைவிட்டுப் போகவேண்டும். அந்தத் துணிவு நமக்கு—நம் சட்டமன்றத்திற்கு ஏற்பட வேண்டுமானால் தமிழகம் சுயநிர்ணய உரிமைபெற்று சுயாட்சியை நிறுவவேண்டும்.

இங்கொரு சிக்கல். திராவிட கழகத்தினர் ஆந்திர, கேரள, கன்னடர் எல்லோரும் கலந்த 'திராவிடஸ்தான்' வேண்டுமென்று சில ஆண்டுகளாகக் கூறிவருகின்றனர். ஆனால் இவர்கள் கூற்றை ஒரு ஆந்திரரோ, ஒரு கன்னடியரோ, ஒரு கேரளரோ கூடக் கேட்கத் தயாரில் இல்லை. கேட்க மறுப்பதோடு மட்டுமல்ல, தங்கள் தங்கள் மொழியின் பிரகாரம் தங்கள் தங்கள் நாட்டைப் பிரித்தாகவேண்டும் என்று சொல்லவும் ஆரம்பித்து விட்டார்கள். இதில் ஆந்திரர்கள் வெகு சமர்த்தர்கள்; தமிழருக்குரிய நிலங்கள்கூட தங்கட்குச் சொந்தம் என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். தெலுங்கு நாட்டைவிட்டு எவ்வளவோ தூரம் விலகியதும் தமிழ் நாட்டின் தலை நகரமாக விளங்குவதுமான சென்னைகூட 'மனதே' என்று கூச்ச

விடுகின்றனர். தமிழ் நிலத்தின் வடக்கெல்லையான வேங்கடத்தை விட முடியாது என்றும் சொல்லுகிறார்கள். இந்த நிலையில், நான்கு மொழிகளைக் கொண்ட சென்னை மண்டலம் (திராவிடர் கழகத்தார் சொல்படி) 'திராவிட நாடு' எப்படித் தனிச் சுயநிர்ணய உரிமைக்குப் பாடுபட, பாடுபட்டுப் பங்கு பெற முடியும்? ஆந்திரர்களும், கேரளர்களும், கன்னடியர்களும் தனித்தனியே சுயநிர்ணயம் பெற்ற மாகாணப் பிரிவினைக்குத் துடிக்கையில் தமிழ் நாட்டினர் மட்டும் ஏமாந்த தனமாகத் தமிழ் நாட்டினுக்குள்ளே "திராவிட நாடு திராவிடருக்கே" என்று கோஷமிட்டுப் பயனில்லை! இதையறிந்தே, "தமிழ் நாடு தமிழருக்கே! 'சென்னையை விடமாட்டோம்' 'வேங்கடத்தைப் பெற்றே தீருவோம்', என்று தமிழரசுக் கழகம் முழக்கமிடுகிறது! அது மட்டிலுமல்ல; "வடநாட்டார் தமிழ் நாட்டைச் சுரண்டி வாழ விட மாட்டோம். தமிழனென்றால் ஒரே இனம்; அங்கே சாதி பூசல், மதப் பூசல் கிடையாது. ஆளுபவன் ஆளப்படுவேன் என்ற பாகுபாடு இல்லை;" என்கிறது தமிழரசுக் கழகம்.

இப்படி உயரிய உன்னத நாடாகத் தமிழகத்தைக்காணத் தமிழரசுக் கழகம் நிறுவி உரிமைப் போர் தொடுத்துள்ளார் திருவாளர். ம. பொ. சிவஞானம். அவர் ஒரு சிறந்த தேச பக்தர் என்பதைத் தமிழகம் அறியும். . ஆகவே, தமிழ் முஸ்லிம்கள் தமிழரசுக் கழகத்தின் வாயிலாகத் தமிழ் நாட்டுப் பிரிவினையை ஆதரிக்க முன் வரவேண்டும் என்பதே என் விருப்பம். இந்திய விடுதலைப் போரில் பங்கு கொண்ட ஒரு தேசிய வாதியாகிய நான் தமிழரசுக் கழகத்தை ஆதரிக்கக் காரணம் சிறந்த தேசபக்தரான ம. பொ. சி. அதை ஆரம்பித்திருப்பதே யாகும். மொழிவாரி மாகாணப் பிரிவினையை காங்கிரஸ் ஆதரிக்கிறது. ஆகவே, இது தேசிய ஸ்தாபனமாகிய காங்கிரஸிற்கு விரோதமான ஸ்தாபன மல்ல. இதில் தமிழ் நாட்டுப் பிரிவினையை ஆதரிக்கும் எல்லாத் தமிழர்கட்கும் சேர உரிமை யுண்டு. சேரவும் வேண்டும். குறிப்பாகத் தமிழ் நாட்டு முஸ்லிம்கள் தமிழரசுக் கழகத்தில் சேர்ந்து நாட்டுக்காகப் போராடி நாட்டு மக்களின் நல்லெண்ணத்திற்குப் பாத்திரமாக வேண்டும். மறுத்தால் அலட்சியம் காட்டினால் பிறகு கஷ்டப்பட வேண்டியவர்கள் நாமாக (முஸ்லிம்களாக)த்தான் இருக்க முடியும்.

"தமிழ் நாடு தமிழருக்கே!" என்று சொல்வது வெறும் கனவல்ல. மதக்கோட்பாட்டிற்குப் புறம்பானது மல்ல.

நாயகம் (முகமது நபி) அவர்களின் வாக்கே, "மனிதனுக்கு முதலில் வேண்டுவது நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்தான்!" என்பதாகும். ஆகவே, முஸ்லிம்களாகிய நாம் தமிழ் நாட்டில் வாழ்வதால் அது நம் தாய் நாடு. தமிழைப் பேசுவதால் அது நமக்குத் தாய் மொழி. தொல்காப்பியம் செய்தவன் சந்ததியார் நாம். திருக்குறள் நம்முடைய பாட்டன் இயற்றியது. சிலப்பதிகாரம் தீட்டியவன் பெருமை நமது பெருமை. இதை மறக்க வேண்டாம். மறுக்க எந்தத் தமிழருக்கும் உரிமை கிடையாது.

வேதகிரந்தம் என்பதற்காக நாம் அரபி கற்கிறோம். நம்மில் சிலர் எப்படியோ (வீட்டில் மட்டும்) உருது பேசுபவர்களாக இருக்கிறார்கள். ஆனால், கடைத் தெருவில் பொதுவில் நாம் பேசுவது, நம்மை ஆண்டது, ஆளவேண்டியது, ஆளப்போவது தமிழ்! தமிழ்! தமிழேதான்! ஆகவே, தமிழ் மொழிக்கு ஊறு செய்யும் தறுக்கரை நறுக்குவோம். தமிழ் நாட்டை விழுங்க வரும் ஆந்திர ஆதிக்கவாதிகளை அடக்குவோம்.

நம் இனத்தவன் என்பதற்காக நம் வீட்டில் சோரம் செய்ய நினைக்கும் உலுத்தனோடு உறவு கொள்வது எப்படி முடியாதோ, அதே போலவே நம் நாட்டினை ஆட்டிப் படைக்க வருபவன் முஸ்லிமாக இருந்தாலும் விடக்கூடாது. அரபியரை அடக்கி ஆண்டவர்கள் துருக்கியர்கள். முஸ்லிம் என்பதற்காக சுதந்திர தாகம் கொண்ட இப்னுசூஊத் (அராபிய புரட்சித் தலைவன்) துருக்கியரை அடக்காமல் விடவில்லை. மதம் என்பது வேறு இனம் என்பது வேறு. நாம் மதத்தால் முஸ்லிம்கள். இனத்தால் தமிழர்கள். நாம் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் கற்றுக் கொண்டவர்களல்ல. தமிழ் நாட்டிற்கு முஸ்லிம் மதம் வந்தது; நாம் அதை வரவேற்றவர்கள் அவ்வளவுதான். ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்துவது முறையாகாது. நாம் முஸ்லிம்கள் ஆகி விட்டதற்காக நம் நாட்டை இழக்க, மொழியை மறக்க முடியாது. உலக முஸ்லிம்கள் என்ற வகையில் ரஷ்யமுஸ்லிமும், அமெரிக்கமுஸ்லிமும், இங்கிலாந்து முஸ்லிமும் தோளோடு தோள் சேர்த்துலாவலாம். ஆனால், ரஷ்யனுக்குத் தன் நாட்டைக் காட்டி கொடுப்பவனாக அமெரிக்கனோ, அமெரிக்கனுக்குத் தன் நாட்டைக் காட்டிக் கொடுப்பவனாக இங்கிலாந்து முஸ்லிமோ இருக்க முடியாது; இருக்கவும் மாட்டான். உலகமெல்லாம் ஒன்றாக இருந்தால் நல்லதுதான்; இருக்கவும் வேண்டியதுதான். ஆனால், இன்

ஹறங்கிலே அதற்கு உகந்ததாக இல்லை. ஆகவே, இப்போது நாம் ஒரே உலகம் பேசுவதில் பயனில்லை. அதே போல தென்னிந்தியா—ஏன் இந்தியாகூட—ஒன்ருக இருக்கத்தான் வேண்டும். ஆனுல், இன்றைய மக்கள் இனவாரியாகப் பிரிந்து வாழ எண்ணி விட்டார்கள். அதற்கான திட்டங்கள் ஆங்காங்கே நடை பெறுகிறது. ஆகவே, நாம் தூங்கிவிடக் கூடாது. அல்லது பின் தங்கி விடக்கூடாது. நம் பங்கிற்கான போராட்டத்தில் கட்டாயம் நாம் குதித்தே ஆகவேண்டும். இல்லையேல் எதிர்காலம் நம்மை இனவுணர்ச்சி அற்றவரென்று நம்மை இழித்துக் கூறும். நாட்டுப் பற்றற்றவரென்று நையாண்டி செய்யும். இன்றைக்கே அன்னிய ஆட்சிக்கு (பாக்கிஸ்தானுச்கு)ப் பாடுபட்டவர்கள் என்ற பழிச் சொல் இந்திய முஸ்லிம்களின் நெற்றியிலே எழுதி ஒட்டப்பட்டு விட்டது! இனியும் இழிச் சொல் பேச நாம் இடம் கொடுப்போமே யானுல் அது மன்னிக்க முடியாத குற்றமாகும். ஆங்கிலேயருக்கு எதிராக நடந்த இந்திய சுதந்தரப் போரில் நம்மில் பெரும்பாலோர் பின் தங்கினர். அதே பலனைத் தமிழ் முஸ்லிம்களாகிய நாம் கண்கூடாகப் பார்க்கிருேம். அந்தப் பழியைத் துடைக்க தமிழகத்தின் சுதந்தரக் கிளர்ச்சியில் பங்கு கொள்வோமாக.

மேனுட்டுடன் தமிழ் நாடு வர்த்தகத் தொடர்பு கொள்ளா முன்பே நீண்ட பல நாட்களாக அராபி நாட்டு தமிழர் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர் அழகிய அராபிக் குதிரைகளிலேதான் சேர, சோழ, பாண்டிய நாட்டுப் படையினர்கள் ஓய்யாரமாகப் பவனி வந்து கொண்டிருந்தார்கள். மக்காவிலே நாயகம் (முகமது நபி) தோன்றி முஸ்லிம் மதத்தை உண்டாக்கிப் போற்றி வளர்க்கையிலும்கூட தமிழ் நாட்டு வேந்தர்களிடம் அராபியர்கள் (முஸ்லிமான பின்பும்) குதிரை விற்றலும், அத்தரும் ஆடையும், முத்தும் வாங்கிச் செல்லலுமாகிய வர்த்தகங்களைச் செய்ய வந்து போயினர். வந்தவரில் சிலர், வங்காளக்குடாக் கடல் கரையிலுள்ள ஊர்களிலும். இந்து மகா சமுத்திரக்கரைப் பட்டினங்களிலும், அராபிக் கடல் நகரங்களிலும் தங்கி இருந்து தொழில் புரிந்தனர். அவர்கட்கு தமிழ் நாட்டில் கல்யாணமும் நடந்ததுண்டு. பலாத்கார மின்றி சகசமான முறையிலே இன்று உறவின் காரணமாகத் தமிழர்களில் சிலர் முஸ்லிம் மதத்தைத் தழுவினர். அவர்களைச் சேர்ந்தவர்கள் தாம் இன்று தமிழ்ப் பேசும் முஸ்லிம்கள். இவர்களில் பெரும்பாலானேர் விவசாயிகள் கடற்கரை ஓரங்களில் வாழ்ந்த (பரவர்கள்) மீன்பிடிப்பவர்களிலும் பெரும்பாலோர்கள் உண்டு. தமிழ் மன்னர்களி

டம் குதிரை வாணிபம் செய்த அராபிய முஸ்லிம்களைத் தமிழ் மன்னர்கள், 'ராவுத்தர்' என்றனர். இன்றும் அந்த இனம் தமிழகத்தில் நிறைய உண்டு.

வடநாட்டு மீது முஸ்லிம் நவாப்புகள் படைகொண்ட காலத்திலே வந்து தமிழகத்தில் தங்கிய (மிகக் குறைவாக உள்ள) வர்கள்தான் உருது பேசும் பத்தானியர்கள். இதற்கெல்லாம் வரலாறுகள் உண்டு. ஆகவே எப்படிப் பார்த்தாலும் தமிழ்நாட்டில் வாழும் தமிழ் முஸ்லிம்கள் அன்னியர்கள் அல்ல. அவர்கட்கு தமிழ் மொழி, தமிழ் நாடு இவற்றின் மீது வெறுப்பிருக்க நியாயமில்லை. இருக்கவும் கூடாது. அப்படி இருப்பதாக ஒரு துளியளவேனும் தெரிய வந்தால் சேதுபதி மன்னன் காயல் பட்டினத்தில் வாழ்ந்த, சையது காதிர் மரைக்காயரை அழைத்துத் தன் சமஸ்தானத்திலே மந்திரியாக வைத்துக்கொள்ளுவானா? தான் அன்னியன் என்ற நினைப்பிருந்தால் கடிகை முத்துப் புலவரிடம் கல்வி பயின்ற உமர்ப்புலவர் தன் குருவினிடம் சமர் பேசி சொற்போருக்கு வந்த வடவனை எதிர்த்துத் தோல்வி காணச் செய்திருப்பாரா? அவரைத் தான் எட்டயாபுரம் ராஜா சமஸ்தானக் கவியாக ஆக்கிக்கொண்டிருப்பாரா?

பாரத அம்மானை பாடியவர் ஒரு முஸ்லிம் புலவர். இன்னும் தமிழிற்குத் தொண்டாற்றிய முஸ்லிம் புலவர்கள் அநேகர். ஏன் இன்றைய தமிழ் அறிஞர்களின் முதன்மையாக விளங்குபவர் கோட்டாறு சதாவதானி செய்குதம்பிப்பாவலர் என்பவர் முஸ்லிம்தானே? இவர்களெல்லாம் தமிழினிடம் ஆர்வம் இல்லாமல் தமிழ் நாட்டினிடம் பற்றுதலில்லாமலா தமிழ் நாட்டைப்பற்றியும் தமிழின் இனிமையையும், உயர்வையும் பற்றிப் பாடியுள்ளார்கள்? ஆகவே, தமிழகத்தில் வாழும் தமிழர்களாகிய முஸ்லிம்களை நான் கேட்டுக் கொள்கிறேன். வீணிலே யோசனை செய்து கொண்டு ஒதுங்கி நிற்க இது நேரமில்லை. எதிர் காலத் தமிழகம் "உன் நாட்டு விடுதலையில் நீ கொண்ட பங்கு என்ன?" என்று நம்மைப் பார்த்துக் கேட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, தமிழரசு நிறுவப் பாடுபடுங்கள். 'தமிழ் வாழ்க' வென்று முழங்குங்கள். "தமிழ் நாடு தமிழருக்கே!" என்று சொல்லுங்கள். தனித்தமிழரசுச் சோஷலிஸக்குடியரசு நிறுவப் பாடுபட முன்வாருங்கள். வாழ்க தமிழ்! வாழ்க தமிழர்! வாழ்க தமிழ் நாடு! வருக சோஷலிஸத் தமிழ்க் குடியரசு!

வெளியிட்டோர் ம. பொ. சிவஞானம் 1-29 இருசப்ப கிராமணி தெரு. திருவல்லிக்கேணி சென்னை. அச்சிட்டோர் திரு. கே. தி. நாகலிங்க முதலியார் சௌகுந்த மீ[illegible] அச்சகம் சென்னை.

தமிழரசு வெல்க!

திரு. ம. பொ. சிவஞானம்

அவர்களின்

மூவர்ணப் படம்

அளவு $8\frac{1}{4}$ x 10 அங்குலம்

விலை அணா 8

●

வியாபாரிகளுக்கும் அதிகப் பிரதிகள் வாங்குவோருக்கும் கமிஷன் தருகிறோம்.

பாதிப் பணம் முன்னதாக அனுப்ப வேண்டும். படம் வி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

எங்களிடம் தமிழிலுள்ள எல்லாப் புத்தகங்களும் கிடைக்கும்.

●

தமிழரசுப் பண்ணை

3, சுப்பராய கிராமணி தெரு,

சேத்துப்பட்டு -::- சென்னை - 10

Wrapper Printed at the Sengunthar Mithran Press, Madras 1